Registered as a News paper in Ceylon விலை சதம் 10



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [14-11-67] இதழ் 345
யாழ்ப்பாணம்பிலவங்க ஐப்பசி 28 ஷஃபான் 11 செவ்வாய்க்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# அரசாங்கத்திலிருந்து வெளியேறும் முடிவு வராது

## தமிழரசு வட்டாரங்கள் தெரிவிக்கும் கருத்து

## இன்றுவாலிபமுன்னணிகூடுகிறது

யாழ்ப்பாணம், செவ்வாய்

**திருக்கோணமலைத்துறைமுகத்தை அரசாங்கம் தேசியமயமாக்கியதைத் தொடர்ந்து தேசியஅரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேறவேண்டுமென்ற கோரிக்கை பலஇடங்களிலும் எழுந்தபோதிலும் நாளையும் நாளை மறுதினமும் கூடும்கட்சியின் பொதுச்சபையும் செயற்குழுவும் அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டுமென்ற தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மாட்டாதெனக்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.**

இன்றுபிற்பகல் தமிழரசுக் கட்சியின் வாலிபமுன்னணி கூடுகிறது. இக்கூட்டத்தில் அரசாங்கத்தை விட்டுத்தமிழரசுக்கட்சி வெளியேற வேண்டும் என்ற குரல் பலமாக ஒலிக்கக் கூடுமென்றும் கட்சியின் மேலிடத்தின் மீது காரசாரமான கண்டனக் கணைகள் தொடுக்கப்படக் கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும்நாளையும் அதற்கு அடுத்தநாளும் நடைபெறும் பொதுச் சபை செயற்குழுக் கூட்டங்களிலும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றாலும் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறுமென கட்சி வட்டாரங்கள் எதிர்பார்க்கவில்லை. பொதுச் சபை, செயற்குழு உறுப்பினர்களில்பெரும்பாலோர் இச் சமயத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவது நல்லதல்ல தெனக் கருதுகின்றனராம்.

மாவட்டசபைகள் நகல் மசோதா பிரதமரிடம் இப்போது இருப்பதால் அது பற்றி ஒரு முடிவு தெரிந்தபின் வெளியேறுவது பற்றித் தீர்மானிக்கலாமென அவர்கள் கருதுகிறார்களாம்.

## தமிழ்ப் பாடசாலைகளின் குறைகளை நீக்கவும்

### கல்விமா அதிகாரிக்கு பண்டிதர் கோரிக்கை

கிளிநொச்சி, திங்கள்

இலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை தமிழ் வித்தியாதிகாரிகள் நியமனம் கல்வி காரியாலயங்களில் தமிழ் எழுதுவினைஞர் நியமனம் ஆகியவை பற்றி கிளிநொச்சி எம் பி. திரு. கா. பொ. இரத்தினம் கல்விமா அதிகாரி திரு. எம். ஜே பெரேராவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்து இவைசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுள்ளார். இவ் விஷயங்கள் பற்றி தாம்முன்னரும் கல்விமா அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென திரு. இரத்தினம் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் தமிழ் எம பி.க்கள் அனைவருக்கும் அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றை அடிப்படையாகக் கொண்டே கிளிநொச்சி எம் பி. இக்கடிதத்தில் கல்வி சம்பந்தமாக எட்டு விஷயங்களை எடுத்துக்காட்டி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுள்ளார்.

## திருமலை துறைமுகத்தில் தொழிற்சங்க கண்காணிப்பு

திருக்கோணமலை, திங்

திருக்கோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து துறைமுகத்திலுள்ள இயந்திரசாதனங்களுக்கும் இதர உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்க சதி முயற்சிகள்நடைபெறலாமென்ற சந்தேகத்தின்மீது இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தைச் சேர்ந்த துறைமுக ஊழியரும் துறைமுக ஐக்கிய தொழிலாளர் சங்கமும் கண்காணிப்புக்குழுக்களை நியமித்துள்ளனவாம்.

## சுவீப்

கடந்த சனிக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த 167-ம் இலக்க சுவீப் முடிவுகளில் சாதாரண பரிசுகள் வரிசையில்

46 A 0088

என்று இருப்பதற்குபதிலாக

26 A 0088

என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

## "திருமலைத் தொழிலாளர் தேசிய மயத்தை எதிர்த்தனர்

### பிரதேசத்தைப் பற்றி வெளியாருக்கு கவலையில்லை"

### திரு. நவரத்தினம் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்

"திருமலையைபிறப்பிடமாகக்கொண்ட தொழிலாளர்கள், துறைமுகம் தேசியமயமாக்கப்படுவதை கடைசி வரையும் விரும்பவில்லை. வெளியிடங்களிலிருந்து வந்து துறைமுகத்தில் வேலை செய்த தமிழ் தொழிலாளர்களே தேசியமயமாவதை விரும்பினார்கள் காரணம் அவர்களுக்கு தமிழ் பிரதேசத்தைப்பற்றி அக்கறை கிடையாது."

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. நவரத்தினம்மேலும் கூறியதாவது:-

வெளியிடங்களிலிருந்து வந்த தமிழ் தொழிலாளருக்கு திருமலை பிரதேசம் பற்றி அக்கறைகிடையாது. அரசாங்க உத்தியோகம் கிடைத்துவிடும்எனநினைத்து சேவைக்காலம் முழுவதும் சொகுசாக வாழ்ந்து இளைப்பாறியபின்னர் தத்தம் ஊர்களுக்கு சென்றுவிடலாம் என்பதாலேயே தேசியமயத்தை ஆதரித்தனர். இவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானது. இவர்கள் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திலும் பிற இடதுசாரி தொழிற்சங்கங்களிலும் அங்கம் வகிக்கின்றனர்.

திருமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட தொழிலாளர்கள்இலங்கை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். தேசியமயத்தினுல் தமிழ்ப் பிரதேசம் பறிபோய்விடும் என இச்சங்கம் கருதுகிறது. அதனுல்தான் இறுதிவரை தேசியமயத்தை எதிர்த்தது.

நான் திருமலைக்கு சென்று இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் சங்கத்தை சேர்ந்தவர்களை சந்தித்தேன். சோகமே உருவான நிலையில் காணப்பட்டார்கள். கடைசியாக நம்பியிருந்த தமிழரசுக்கட்சியும் தங்களை கைவிட்டுவிட்டதாகக் கூறினுர்கள்.

திருமலைத் துறைமுகம் தேசியமயமானதையிட்டு திருமலைக்கு வெளியிடங்களில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் சரியான விளக்கம் கிடையாது. நான் சென்றிருந்தபோது திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதை இடதுசாரி தொழிற்சங்கங்கள் கொண்டாடின.

கொழும்பிலிருந்து இலங்கை வர்த்தக ஊழியர் (8-ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் பெரேராவுக்கு மலேரியா ஜுரம்

கொழும்பு, திங்கள்

ஆஸ்பததிரியில் அனுமதிக்கப்பட்டுள்ள லங்காசமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா இப்போது குணமடைந்துவருகிறார். பூரண குணமடைந்தாலும் அவர் சில வாரங்கள் தொடர்ந்து பூரண ஓய்வு எடுக்கவேண்டுமென டாக்டர்கள் கருதுகின்றனர்,

டாக்டர் பெரேரா கடுமையான மலேரியா ஜுரத்தினுல் பீடிக்கப்பட்டிருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர் இலங்கையில் அல்லது சமீபத்தில் உகண்டாவில் நடைபெற்ற சர்வதேச பார்லிமெண்டரிச்சங்க மகாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்தபோது அவர் மலேரியாவினுல் பீடிக்கப்பட்டிருக்கக் கூடுமென டாக்டர்கள் கருதுகின்றனர்.

---

மல்லாவி, திங்கள்

துணுக்காய்ப் பகுதியில் பல இடங்களில் கசிப்புத் தயாரித்து விற்றுவருவதாகவும், இதனுல் குடிகாரரின் தொல்லையைத் தாங்க முடியவில்லையெனவும் அப்பகுதி மக்கள், துணுக்காய்க் காரியாதிகாரி திரு.மு. தம்பிமுத்துவிடமும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடமும் தெரிவித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

பருத்தித்துறை, நகரசபை

### கேள்விப்பத்திர அறிவித்தல் 1968

பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் கீழ்க்காணும் 1968-ம் ஆண்டு குத்தகைகளுக்கு நவம்பர் மாதம் 22-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் நவம்பர் மாதம் 20-ந் திகதி வரை குறித்த பிணைப்பணமும், கேள்விப்பத்திர நிர்ணய விலையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| | பிணைப்பணம் | - | கேள்விப்பத்திர நிர்ணய விலை. |
|---|---|---|---|
| 1. காய்கறிச்சந்தை - | 250-00 | | 25-00 |
| 2. மீன் சந்தை - | 150-00 | — | 15-00 |
| 3. வான், மாட்டுவண்டிக்காலை - | 50-00 | — | 5-00 |
| 4. ஆட்டிறைச்சிக்கடை - | 50-00 | — | 5-00 |
| 5. மாட்டிறைச்சிக்கடை - | 50-00 | — | 5-00 |

மேலும் விபரங்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ந. நடராசா,
தலைவர்.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
8-11-67. 325


**கைத்தறி நெசவாளர்களுக்கோர்**
**விசேஷ அறிவித்தல்**

உங்களுடைய சொந்தக் கைத்தறிகளில்
உற்பத்தியாகும் எந்தவிதமான ஜவுளி வகைகளையும்
எம்மிடம் பெறுமதியான விலைகளில்
விற்பனை செய்யலாம்.

**S. R. S.**

**ஜவுளி மாளிகை**

(கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள்)
216, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்; 296



**இப்பொழுது நடைபெறுகிறது**

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]

தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு

**பிளாஸா** [வெள்ளவத்தை] **கெப்பிட்டல்** [கொழும்பு]

**மைலன்** [கொட்டாஞ்சேனை]

**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை]

மற்றும் நாலு திரைகளில்

**எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்**

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!

கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.

மற்றும்



ஜெயலலிதா, ஜெயந்தி

நம்பியார், அசோகன்,

நாகேஷ், ஸ்ரீராம்,

மனோரமா,

பி. கே. சரஸ்வதி

நடித்த

**தேவர் பிலிம்ஸ்**

# முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்

இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்



**6-வது வாரம்**

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **லக்ஷ்மி** [கரவெட்டி]

ஜெய்சங்கர் — ஜமுனு — நாகேஷ் — பேபி பத்மினி

நடித்த

ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற

# குழந்தையும் தெய்வமும்


# 'பழைய குருகுலக்கல்வி பேணப்பட வேண்டும்'

## முன்னாள் வித்தியாதிகாரி கருத்து

உரும்பராய், திங்கள்

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன். இறைவனுக்குச் சமமாக ஆசிரியர்கள் மதிக்கப்பட்டு வந்தார்கள். இந்தமுறை குருகுலவாச மூலம் வளர்ந்து வந்தது. பாடசாலைகளில் நல்லகுருகுலக் கல்வி அதாவது நல்லதொரு பாரம்பரியம் வளர வேண்டும். அவ்வளர்ச்சி இருந்தால்தான் எந்தக்கல்வி நிலையத்திலும் கல்வி உண்மையில் வளரமுடியும். இப்படியான அடிப்படைக்கல்வி வளர ஆசிரியர்களின் இடையீடில்லாத சேவை மிகமிக இன்றியமையாதது. இவ்வாறு பொறுப்புவாய்ந்த ஆசிரியர்களை குமாஸ்தாக்களாகப் பாவித்து கண்ட கண்டபடி அடிக்கடி இடமாற்றிக் கொண்டிருப்பது இந்தநாட்டின் கல்விவளர்ச்சிக்குப் போடும் பெரியமுட்டுக்கட்டையாகும்'.

கோப்பாய் வட்டார வித்தியாதிகாரியாக இருந்து ஒய்வுபெற்ற திரு. ஆ. சிவகுரு தமது சஷ்டியப்த பூர்த்தி விழாவின்போது மேற்கண்டவாறு கூறினார்.

வலிகாமம் கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் சென்ற சனிக்கிழமை வலி. கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடந்தேறிய இவ்விழாவில் திரு. சிவகுரு தொடர்ந்து பேசுகையில்.

பழைய குருகுலக்கல்வி இந்த நாட்டில் பேணப்பட வேண்டுமானால் ஆசிரியர்கள் ஒரே இடத்திலும் ஆசிரியர்கள் விரும்பும் இடத்திலும் கடமையாற்றவேண்டும்'' என்றார்.

பண்டிதர் நி. சி. முருகேசு சேவைநலம் பாராட்டு பசாரப்பத்திரத்தை வாசித்தளித்தார்.

கல்வி ஆலோசகர் திரு. வி. விசுவலிங்கம் பேசுகையில், திரு. ஆ. சிவகுரு இருபத்திரண்டு வருடங்கள் சிறப்பாக ஆசிரியப் பணிபுரிந்தார். பதினைந்து வருடங்களுக்கு மேலாக வித்தியாதரிசி என்ற பொறிக் கூட்டினுள் அகப்பட்டு பலபல பிரச்னைகளையெல்லாம் சமாளித்தார். உத்தியோகக் கூண்டினுள் இருந்து வெளியே இப்பொழுது விடுதலை பெற்றுள்ளார். சுதந்திர புருஷனாக அனைவருக்கும் சேவையாற்றும் சந்தர்ப்பம் திரு. சிவகுருவுக்குக் கிடைத்திருக்கிறது என்றார்.

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா, வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை, அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் பிரமஸ்ரீ சி. ஸ்ரீநிவாசன் உட்படப் பலர் திரு. சிவகுருவின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

## "ஏழைகளுக்கு வாரி வழங்கினர்"

### மறைந்த முஸ்லிம் பெரியாருக்கு அனுதாபக் கூட்டத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்.

''நம்மை விட்டு மறைந்த ஜனாப் ஐத்துறூஸ் சாதி, சமயம் பார்க்காமல் ஈட்டிய சேவை மிகப் பெரியது. நம் சமூகத்தில் இப்படியான ஒரு சிறந்த பொதுநலத் தொண்டனை இழப்பது துரதிர்ஷ்டமானது.''

யாழ்ப்பாணம் சின்னப் பள்ளிவாசல் மைதானத்தில், ஜனாப் ஐத்துறூஸ் மறைவு குறித்து நடந்த அனுதாபக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய, முஸ்லிம் சமூகசேவா சங்கத் தலைவர் ஆலி ஜனாப் என். எம். முகம்மதுபிரான் மேற்கண்டவாறு கூறினர்.

உபதலைவர் ஜனாப் வி.எம். முத்துராசா கூறியதாவது: மறைந்த ஜனாப் ஐத்துறூஸ் ஏழைமக்களுக்காகத் தமது செல்வத்தைப் பலதுறைகளிலும் வழங்கினர். இவர் போன்று நம்மத்தியிலுள்ள ஏனையதலைவர்களும், பொதுநலத்தில் ஈடுபடவேண்டும்.

தமிழ் காங்கிரஸ் காரியதரிசி திரு. ரி. சங்கரப்பிள்ளை பேசும்போது, மரணத்திற்கு மூன்று தினங்களுக்குமுன்பு உஸ்மானியாக் கல்லூரிக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட முன்வாசல் 'கேற்றை'த் தமது செலவில் போட்டாரென்றால், அவர் பொதுச்சேவையில் எவ்வளவு அக்கறைகொண்டிருந்தார் என்பதை கூறததேவையில்லையென்றார்.

திருவாளர்கள் அல்பிரட் துரையப்பா, சி. முருகரத்தினம், ஜனாப் எம். எம். சரிபு, ஜனாப். எம். நூர்முகமது, ஜனாப் எம். ஈ. ஷாஹுல் ஆகியோர் ஜனாப் ஐத்தூறுஸ் ஆற்றிய சேவைகளை எடுத்துக் கூறினர்கள்.

முஸ்லிம் பகுதியிலுள்ள சகலபாடசாலைகளும், வியாபார ஸ்தலங்களும், சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க அன்னாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் விதத்தில் மூடப்பட்டன. வீதிகளில் துக்கக்கொடிகள்பறக்கவிடப்பட்டன. யாழ். மாவட்ட நீதிபதி ஜனாப் எம். அமீர், வழக்கறிஞர்கள், பிரமுகர்கள் சமூகம் கொடுத்தார்கள்.


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி-அஞ்சலிதேவி
நடித்த
**கணவனே**
**கண்கண்ட தெய்வம்**



**மனோகரா**
யாழ்ப்பாணம்
Daily at 2-30, 6-30, & 9-45 Pm
Pre Poya & Poya 10-30 a m
தேவானந், சைராபானு, சசிகலா நடித்த
**பியார் மொஹபத்**
**PYAR MOHABBAT**
ஹிந்தி (ஈஸ்ட்மன் கலர்)
இசை-சங்கர், ஜெயகிஷர்



**REGAL** JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 p. m.
Audie Murphy
Darren McGavin
in
**BULL FOR A BADMAN**


## தீ விபத்தில் மூவர் பலி

யட்டிநுவரை, திங்கள்

பதினன்கு வயது சிறுவன் உட்பட மூவர், இங்குள்ள மாட்டுப் பண்ணையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தனர். தீவிபத்து ஏற்பட்டபோது 3 பேரும் நித்திரையில் ஆழ்ந்திருந்தனராம். இது சம்பந்தமாக கம்பஹா பொலிசார் நால்வரை கைதுசெய்து விசாரணை செய்தனர்,

**மாநகரசபை**

**கேள்வி அறிவித்தல்**

**ஒரு திருத்தம்**

12-11-67 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில், கேள்விப்பத்திரங்கள் 23-10-67 என இருப்பதை 23-11-67 என திருத்திக்கொள்க. 326

## வரி விளம்பரம்

### தேவை

**கணக்காளர்:**

தராதரம் S. S. C. அல்லது G.C.E.(O L) கணக்கும் தமிழும் உட்பட ஆறுபாடங்கள் சித்தி, கூட்டுறவுப் பயிற்சிக்கலாசாலை அல்லது சேகரகணக்காளர். ரொக்கப்பிணை: ஆயிரம்ரூபாய். மேற்படி தராதரப் பத்திரம் உடையோர் 22-11-67 க்கு முன் காரியதரிசி, தெல்லிப்பழை கூட்டுறவுப் பண்டகசாலை, தெல்லிப்பழை என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 2127

### தேவை

**அமைப்பாளர்**

ஆங்கிலம், தமிழ் பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையில் [சாதாரணம்] சித்தியடைந்த 25க்கும் 45க்கு மிடையிலுள்ள வயதுடைய ஆண்கள் வலிகாமம் மேற்குப் பகுதியில் அமைப்பாளர் உத்தியோக வேலைக்கு மனுப்பண்ணும்படி இலங்கை தேசிய கயரோக நிவாரணசங்கம் அழைக்கின்றது. இம்மாதம் 25-ந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் டாக்டர் கே.எஸ். சிவஞானரட்ணம், கிறீன் மெமோறியல் ஆஸ்பத்திரி, மானிப்பாய் என்ற விலாசத்திற்கு மனுப்பண்ணுக. 2126

### கல்வி

**புகைப்படப்பிடிப்பு**

ஆறு மாதங்களில் புகைப்படம் பிடித்தல், பதித்தல் பெரிதாக்குதல் கற்பிக்கப்படும். காரியதரிசி, யாழ். தொழில் கல்லூரி, 426, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 2128

## திருமலைதுறைமுக தொழிலாளர் கோஷ்டி நாளை இங்கு வரும்

யாழ்ப்பாணம, செவ்வாய்

திருக்கோணமலைத் துறைமுகத்தொழிலாளர் கோஷ்டியொன்று நாளை யாழ்ப்பாணம் வருமென்றும் இக்கோஷ்டி, துறைமுகம்தேசியமயமாக்கப்பட்டதற்கு தமிழரசுக்கட்சி பொதுச்சபை உறுப்பினர்களிடம், நேரில் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்குமென்றும் தெரிய வருகிறது.

## ஆண்டுவிழா ஒத்திவைப்பு

சுழிபுரம், திங்கள்

இவ்வருடப் பிற்பகுதியில் கொண்டாடப்படவிருந்த சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடத்தின் அறுபத்து மூன்ருவது ஆண்டு பூர்த்திவிழா காலநிலை. சீர்கேடு காரணமாக அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவிழா அமைப்பாளர் திரு. எம். சிவப்பிரகாசம் நமது நிருபரிடம் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட வியட்னுமில்

# கடந்த 10 நாட் கடும் சண்டையில் 700 க்கும் அதிகமானோர் மாண்டனர்

## வட வியட்னுமியரின் மின்னல்தாக்குதலில் 50 அமெரிக்க விமானம் நாசம்

சைகோன், நவ. 13

வியட்னுமில், அமெரிக்கத் துருப்புகளுக்கும் வடவியட்னும் துருப்புகளுக்குமிடையே கடந்த 10 நாட்களாக நடந்த கடும் சண்டையில், 700 பேர் வரை உயிரிழந்திருப்பதாகவும், 500 பேருக்கு மேல் காயமுற்றிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கதரப்பில் 94 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 500 பேர் வரை காயமுற்றதாகவும் அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வடவியட்னுமியர் 600 பேருக்கு மேல் கொல்லப்பட்டதாகவும், காயமுற்றவர்களின் விபரங்கள் தெரியவில்லையெனவும் அதே வட்டாரங்கள் கூறுகிளிறன.

**அமெரிக்க விமான குண்டுவீச்சு**

நேற்று, மிகப் பெரிய அமெரிக்க விமானங்கள் சைகோனுக்கு 250 மைல் தொலைவில், வடவியட்னுமிய இலக்குகள் மீது குண்டு வீசித் தாக்கின.

**மின்னல் தாக்குதல்**

அதற்கிடையில், நேற்று வடவியட்னுமியர் நடத்திய மின்னல் தாக்குதலொன்றில், 31 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். 50 விமானங்கள் சேதப்படுத்தப்பட்டன. தானுங்குக்குத் தெற்கே, அமெரிக்க விமான தளமொன்றின் மீதே வடவியட்னுமியர் இம் மின்னல் தாக்குதலை நடத்தினர். தாக்குதல் 5 நிமிடம் நீடித்தது.

# ராஜ்யங்களில் உள்ள மத்திய உடைமைகள்

## பாதுகாக்க வேண்டுமென இந்திய அரசு வலியுறுத்தல்

புதுடில்லி, நவ. 13

இந்திய ராஜ்யங்களிலுள்ள மத்திய நிலையங்கள், ஸ்தாபனங்கள், உடைமைகளைக் கண்காணித்துப் பாதுகாக்கும் பொறுப்பு அவ்வவ் ராஜ்யங்களின் கடமையாகும் என்று இந்திய மத்திய அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்களுக்கு வலியுறுத்தியுள்ளது.

அரசியற் சாஸனத்தின் கீழ், ராஜ்ய அரசாங்கங்கள் மீது சார்ந்துள்ள இப் பொறுப்பை அவை சரிவர நிறைவேற்ற வேண்டுமென்றும், மத்திய உடைமைகளை பாதுகாப்பதில் உதவி தேவையெனில், ராஜ்ய அரசாங்கங்கள் மத்திய அரசிடம் அவ்வுதவியைக் கோரத் தயங்கக் கூடாது என்றும் மத்திய அரசு மேலும் அறிவித்துள்ளது.

# இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்வு

## நந்தா-பட்டீல்போட்டி ஏற்படலாம்?

புதுடில்லி, நவ. 13

இந்திய காங்கிரஸ் அக்கிராசனர் பதவிக்கான தேர்தலில், திரு. எஸ். கே. பட்டீல் போட்டியிடக் கூடும் என்று தெரிகிறது. ஏற்கனவே திரு. குல்ஜாரிலால் நந்தாவின் பெயர் இதுசம்பந்தமாகப் பிரஸ்தாபிக்கப் பட்டது.

திரு. காமராஜ், மீண்டும் அக்கிராசனர் பதவியில் நீடிக்கவிரும்பவில்லை என்று தெரிவித்து விட்டதாகக் கூறப்படுகிறது. தலைமையினர் ஏகமனதான தேர்வுக்கு வழிசெய்யவேண்டுமென்றும், இதுசம்பந்தமான சர்ச்சைக்கு இடந்தரலாகாதென்றும் விரும்புகிறுர்.

காங்கிரஸ் காரியக்கமிட்டி எதிர்வரும் 16-ம் திகதி கூடுகிறது. ஏகமனதான தேர்வுக்கு முயற்சி இருக்கவே செய்யும். ஆயினும், இப்போதுள்ள நிலைமையில், பெருந்தலைவர்களின் மனோநிலையைக் கருதி, போட்டி நடக்குமென்றே தோன்றுகின்றது.

# இஸ்ரேல் - ஜோர்தான் துருப்புகள் மோதல்

அம்மான், நவ. 13

இஸ்ரேல் துருப்புகளும் ஜோர்தான் துருப்புகளும் நேற்று, ஜோர்தான் நதியூடாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில்ஈடுபட்டன.

இரு தரப்பினரும், மற்ற நாடேமுதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகப் பரஸ்பரம் குற்றஞ் சாட்டிக் கொண்டன.

சிறு இயந்திரத்துப்பாக்கிகளே இச் சண்டையில் பாவிக்கப்பட்டன. ஆட்சேதம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

# அமெரிக்காவில் ஜப்பான் பிரதமர் சற்றோ

வாஷிங்டன். நவ. 13

ஜப்பானிய பிரதமர் திரு. ஸற்றோ, நேற்று அமெரிக்கா போய்ச்சேர்ந்தார்.

அவர் இன்று அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனைச் சந்தித்து, வியட்னும் மற்றும் பிரச்னைகளையிட்டு விவாதிப்பார்.

நாளையும், மறுநாளும் அவர் அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன் ரஸ்குடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

# மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் கொண்ஸ்டண்டைன்

## ஜேம்ஸ் பொண்டை தோற்கடித்தார்!

சென்ற். அண்ட்ரூஸ், [ஸ்கொத்லாந்து], நவ. 13

சென்ற் அண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிவப்புடை அணிந்த 2,000 மாணவர்கள், முன்னுள் மேற்கிந்திய தீவுக் கிரிக்கெட் வீரரான சேர் லியரி கொண்ஸ்டண்டைனைத் தமது புதிய றெக்டராகத் தெரிவு செய்துள்ளனர்.

சேர்கொண்ஸ்டண்டைனுடன் இப்பதவிக்கு மூவர் போட்டியிட்டனர். அம்மூவரில் ஒருவர், 'ஜேம்ஸ்பொண்ட்' என்னும் உலகப்புகழ் பெற்ற இரகசியதுப்பறியும் ஏஜெண்ட் பாத்திரத்தில் நடிக்கும் ஹொலிவூட் நடிக

[6-ம் பக்கம் பார்க்க]

# ரஷ்யாவின் புதுரகறொக்கெட்டுகள்

## எதிரிகள் அழிக்க முடியாதவை என்கிறது 'றெட் ஸ்டார்'

மாஸ்கோ, நவ. 13

ரஷ்ய புரட்சியின் 50-வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது, கடந்த வாரம் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் புதியரக சோவியத் றொக்கெட்டுகள் பவனி வந்தன அல்லவா? அந்த றொக்கெட்டுகளை முறியடிக்க இயலாதென்றும், அவற்றை எதிரிகள் கண்டுபிடித்து அழிக்க இயலாதென்றும் 'றெட் ஸ்டார்' என்ற ரஷ்ய ராணுவப்பத்திரிகை கூறுகிறது.

'றெட் ஸ்டார்' மேலும் கூறியிருப்பதாவது: ''இத்தகைய றொக்கெட்டுகளோ அன்றி அவற்றுக்கு அமைத்துள்ள தளங்களோ, வேறு எந்த ராணுவத்துக்கும் இல்லை. இந்த றொக்கெட்டுகள் எந்தத்திசையில்வேண்டுமானுலும் சுட வல்லவை. இவை உடனடியாக இயக்கக் கூடியவை.

இந்த றொக்கெட்டுகள் தமது குண்டுகளை ஆயிரக்கணக்கானமைல்களுக்கு அப்பால் கொண்டுபோய் குறி தவருமல் தாக்கக்கூடியவை. அவை சமிக்ஞைகளின் படி சிறிதும் தவருமல் பணியாற்றக்கூடியவை''

# இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கு பார்லிமெண்டில் பலத்த சோதனை

## மொழிவாரி ராஜ்ய அமைப்பால் தேசிய ஒற்றுமை பாதிப்பு

உப ராஷ்டிரபதியின் கவலை



புதுடில்லி, நவ. 13

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் அரசாங்கம், இன்று ஆரம்பமாகும் இந்தியப் பார்லிமெண்டின் மாரிகாலத் தொடரில், பலத்த சோதனைக்குள்ளாகவிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இத்தொடரில், மொழி தொடக்கம் தேசியமயம் வரை, பல பிரச்னைகள் இந்திராவின் அரசாங்கத்துக்குத் தலையிடியைக் கொடுப்பனவாக அமைந்துள்ளன.

**தடையாக இருக்கலாம்**

போதுமான அளவு பெரும்பான்மை காங்கிரசுக்கு இருந்தபோதிலும், அதன் திட்டங்களை அமுல்நடத்துவதற்கு, எதிர்க்கட்சிகளின் இணைந்த எதிர்ப்பு பெருந்தடையாக அமையலாம்.

**இந்திராவின் வேண்டுகோள்**

பார்லிமெண்ட் காங்கிரஸ் அங்கத்தவர்கள் ஒற்றுமையாகச் செயற்படுமாறு பிரதமர் திருமதி இந்திராகாந்தி கேட்டுள்ளார்.

காங்கிரசின் சோஷலிஸ திட்டத்தைத் தடைசெய்யும் நோக்குடன் சில கட்சிகளே தோன்றியுள்ளதாகவும், அவற்றின் எதிர்ப்பைக் காங்கிரஸ்சமாளிக்க வேண்டுமென்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

[6-ம் பக்கம் பார்க்க]

தென் அரபிய சமஷ்டி

# புளோஸி பயமுறுத்தல்

ஏடன், நவ. 13

தென் அரபிய சமஷ்டியின் தேசிய விடுதலை முன்னணிக்கட்சியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தபிரிட்டன் கொள்கையளவில் சம்மதம் தெரிவித்துள்ளதாக ஏடனிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில், மற்றைய தேசியக்கட்சியானபுளோஸியன் தலைவர், பிரிட்டன் நிறுவும்எந்த அதிகாரத்தையும் தமது கட்சி நாசமாக்குமெனப் பயமுறுத்தியுள்ளார்.

# ஈ. வே. ராவுக்கு வரவேற்பு

சென்னை, நவ. 13

திராவிட கழகத்தலைவர், பெரியார் ஈ. வே. ராவுக்குச் சென்னை நகராட்சிமன்றம், இம்மாதம் 22-ந் திகதியன்று ஒரு வரவேற்பு அளிக்கும்,

## முதலாவது உலக கவர்னர்கள் மகாநாடு

வாஷிங்டன், நவ. 13

முதலாவது உலக கவர்னர்கள் மாநாடு, அமெரிக்காவிலுள்ள ஸான் அன்டோனியோவில், அடுத்த வருடப் பெப்ரவரியில் நடைபெறுமெனத் தெரிகிறது.

இந்த மகாநாட்டில், அமெரிக்க கவர்னர்கள் சகலரும் சமுகமளிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

"உலகத்தை இல்லமாகவும், சமுதாயத்தை உறவாகவும் நன்மை செய்தலை கடமையாகவும் கொண்டவன் வாழ்வு அழிவதில்லை.

—நேரு

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு ஐப்பசிமீ 28உ (14-11-67)

## கல்விக் குழப்பம்

வித்தியாலங்கார பல்கலைக் கழக மாணவர்களும் வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கத் தொடங்கியிருக்கின்றனர். கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் எந்த நோக்கத்துடன் பகிஷ்கரிப்பு இயக்கம் நடத்தினர்களோ, அதே போல் வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்தின் அந்தஸ்து பெயர்ப் பிரச்னையிலேயே மாணவர்கள் பகிஷ்கரிப்பு இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

இனி வித்தியோதயப் பல்கலைக் கழக மாணவர்களும் இந்த வழியைப் பின்பற்றக் கூடும். இதைத் தொடர்ந்து நாட்டின் இதர பகுதிகளிலுமுள்ள கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் தங்கள் கல்லூரிகளின் அந்தஸ்தை உயர்த்தி 'கனிஷ்ட' என்ற பதத்தை நீக்க வேண்டுமெனக் கோரி பகிஷ்கரிப்பும் ஆர்ப்பாட்டமும்செய்யத் தொடங்கலாம். வித்தியாலயங்களையெல்லாம் மகா வித்தியாலங்களாக்க வேண்டுமென்றும் மகா வித்தியாலயங்களை மத்திய மகா வித்தியாலயங்களாக்க வேண்டுமென்றும் கூட ஆர்ப்பாட்ட இயக்கங்கள் தொடங்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல தேசிய உயர் கல்விச்சபை, பல்கலைக் கழக செனட் சபை ஆகியவை உரிய சமயத்தில் நல்ல யோசனை தெரிவித்தும் தமது வரட்டுப் பிடிவாதம் காரணமாக பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில், பல்கலைக் கழகப் பெயர், அந்தஸ்து பற்றிய ஒரு வியாதியைப் பரப்புவதற்கு கல்வி அமைச்சர் வழி காட்டிக் கொடுத்து விட்டார்.


நாட்டுக்கேற்ற கல்வித் திட்டம் கொண்டு வரப் போவதாகக் கூறி உலக நாடுகள் பலவற்றிலும் மாதக் கணக்கில் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பிய கல்வி அமைச்சர், கல்வித் திட்டம் கொண்டு வந்தாரோ. கொண்டு வரவில்லையோ கல்வித் துறையில் குழப்பத்தையும் சிககலையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றிருக்கிறார் என்று சொல்லலாம். இதை அவர் தெரிந்துதான் செய்கிறாரா இல்லைத் தெரியாமல் தான் செய்கிறாரா என்று சந்தேகம் கொள்வதற்கும் நியாயமிருக்கிறது.

கல்வி அமைச்சர் எந்த விஷயத்தில கைவைத்தாலும அது எதிர்ப்பையும் அதிருப்தியையுமே தேடிக் கொடுக்கிறது. அவருக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தின் மீதே பாவம்பழியெல்லாம் சேர்கிறது.

பல்கலைக் கழக மாணவர் பிரச்னை, ஆசிரியர்களை பெருமளவில் இடமாற்றும் முயற்சி, யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களை பெருமளவில் ஒரே சமயத்தில் வெளி மாகாணங்களுக்கு இடமாற்றும், திட்டம் இவைமட்டுமல்ல இன்னும் பல, கல்வி அமைச்சரின் சாதனைகளுக்கும் பொதுமக்களின் வேதனைக்கும் சான்று கூறும்.

# குழந்தைகளின் பிரிய நண்ப

[பண்டித ஜவகர்லால் நேருவின் 78-வது பிறந்ததினத்தை முன்னாள் இந்திய ஜனாதிபதி டாக்டர் சர்வபள்ளி ராதாகிரு கூறுவது]



## இவரைப்பற்றி

எங்கள் இரு பெரும் தலைவர்கள் காந்தியும் நேருவும் குழந்தைப்பிரியர்கள். அவர்களோடு கதைத்து, அளவளாவி, விளையாடி, எதிர்காலத்தில் அவர்களுடைய முக்கியத்துவத்தை உணர்த்தினார்கள். குழந்தைகளை நண்பர்கள் போலவே நடத்தினார்கள். சிறுவர்கள் முழுமையான வாழ்க்கை வாழவேண்டுமென்று விரும்பினார்கள். இருவரும் ஆடல் பாடல்களுக்கு ஊக்கமளித்து எங்கள் பழம்பெருமையை நினைவூட்டும் கதைகளையும் சொன்னார்கள். வளர்ந்தோரையும் குழந்தைகள் போல சூதுவாதற்றவர்களாய், நாகரீகத்தால் பண்பு கெடாதவர்களாய், பொறுமையுடையவர்களாய் வாழும்படி வற்புறுத்தினார்கள். இக் குணதிசயங்கள்தான் மனிதனுடைய வாழ்வை நிறைவாக்குவன. வளர்ந்தவர்களாகிய நாம் குழந்தைகளின் உற்சாகத்தைக் கெடுக்கலாகாது. அவர்களுடைய வெள் நெஞ்சத்தை புண்படுத்தலாகாது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உண்மையை அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

நாம் வாழும் இப்பூவுலகம் ஒரே குடும்பம். அதன் மூலை முடுக்குகளிலெல்லாம் வாழ்பவர்களை விஞ்ஞானம் மிக அருகில் கொண்டுவந்துவிட்டது. இந்த அண்மையைப் பயன்படுத்தி உலகை ஒரு தனி சமுதாயமாக்குவதற்கு பொது லட்சியங்களும் பொது நோக்குகளும் அவசியம். இந்நோக்குகளையும் லட்சியங்களையும் பற்பல மக்கள் தத்தம் பண்பாட்டுக்கும் திறமைக்கும்ஏற்றவாறு நிறைவேற்றுவார்கள்.

இவ்வேற்றுமைகளை நாங்கள் அழிக்கமுயலலாகாது. எமது நாட்டிலுள்ள பலவேறு சாதிகளும் சமயங்களும் ஒன்று சேர்ந்து ஒரு பொது கலாசாரத்தை சமைத்திருக்கின்றன. குழந்தைகள் பற்பல நாடுகளின் சரித்திரத்தைப் படித்து அவற்றின் தனிச்தன்மையை உணரவேண்டும். இளம் வயதிலேயே அவர்களுக்கு நவீன விஞ்ஞானமும் பொறியியலும் கற்பிக்கப்பட வேண்டும். உலக இலக்கியங்களைப் படித்து அவர்களுடைய அறிவு கூர்மையாகி உணர்ச்சிகள் பரிசுத்தமாக வேண்டும்.

எமது குழந்தைகளை மெஷின்கள் போல் பாவிக்காது மனித ஜீவன்களைப் போலப் பாவிக்கவேண்டும்.

இந்திய இளைஞர்கள் எல்லோருக்கும் நேரு ஒரு நல்ல முன் மாதிரியாக விளங்குகிறார். உண்மையில் திண்மை எம்மிடமிருக்கும் வரை உண்மை மேலோங்கும் என்று அவர் திடமாக நம்பினார். எங்கள் நாட்டை அவர் கண் மூடித்தனமாகக் கும்பிடவில்லை. அதிலுள்ள அசுத்தம் பல நீக்கப்பட வேண்டுமென்று விரும்பினார். எமது சிந்தனையிலேயே ஒரு பெரும் புரட்சியை உண்டுபண்ணினார். எமது மனச்சாட்சிக்கு விரோதமாக பழக்க வழக்கங்களை அவர் வெறுத்தார். இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றி அவர் பெரிய கனவு கண்டார். எமது மக்கள் அறிவுள்ளவர்களாயும், பொறுமை, காருண்யம் முதலிய தாராள சிந்தையுள்ளவர்களாயும் இருக்க வேண்

அவர் விரும்பி
குள் உள்ள வே
நல்லெண்ண
சிநேகப் பான்
தீர்க்கவேண்டும்.
பான மனோபாவ
படாது. உலகில்
கள் இருக்கலாம்
ஆக்கிரமிப்புக்கு

வருங்காலத்தி
நம்பிக்கை வை
கொண்ட உ
முன்னேறுவோம

### இன்றைய பலன்

14-11-67

செவ்வாய்க்கிழமை

ஐப்பசிமாதம் 28-ந் திகதி

நட்சத்திரம்- ரேவதி இரவு 9-29 மேல் அச்சவினி.

திதி-திரயோதசி.

யோதசி.

சுபநேரம்- 10-37—12-07.

ராகுகாலம்- 3-07—4-37.

மேஷம் - இலட்சிய வெற்றி. இறைவழி நாட்டம்.

ரிஷபம் - குடும்பத்தில் புயல், துன்பத்தின்நிழல்.

மிதுனம் - வாகனசுகம், வரவும் பெருகும்.

கடகம்-பாசப்பிணைப்பு, பரவசநிலை.

சிம்மம்-உறவாடிக்கெடுப்பர், உஷாராகவிரு.

கன்னி - கலையின் பெயரால் காதல் வலை.

துலாம் - கொள்கையில் கோணல் திருந்திநட.

விருச்சிகம் - அறிவுத்தாகம், அறிஞர் உதவி.

தனுசு - உண்மையால் உயர்வு, ஊக்கமிகுதி.

மகரம் - விருந்துவரும், வெற்றித்திருநாள்.

கும்பம் - மறதிக்குணம், பின்தங்கிய நிலை.

மீனம் - தாரத்தின் வழியால் இதயபாரமுமுண்டு.

—சோதிடக கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை.



→ இவர்

ஆசிரியருக்கு கடிதங்கள்

## ஆர்த்திரா தரிச

இவ்வருடம் ஆர்த்திரா தரிசனத்தை 18-12-67 மார்கழி மாதம் 3-ந் திகதிகொள்ளவேண்டுமென இலங்கைப் பஞ்சாங்கங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்தியப் பஞ்சாங்கங்கள் 14-1-68 மார்கழி மாதம் 30-ந் திகதி கொள்ளவேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளன. நாங்கள் சிதம்பரம், மதுரை தேவஸ்தானங்கட்கும், ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளிடமும் எழுதிக்கேட்டதற்கு, 14-1-68 மார்கழி 30-ந் திகதிதான் கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர். இங்கும் சில கோயில்கள் 14-1-68 மார்கழி 30-ந் திகதியைத்தான் கொள்கின்றன என அறிந்தோம். தாய்நாட்டில் ஒரு நாளும் சேய்நாட்டில் ஒரு நாளும் கொள்வது நல்லதல்ல. எனவே கோயில் அதிகாரிகளும் சைவ பக்தர்களும் கூடி ஆலோசித்து இதற்கு ஆவன
சிறப்பு.

சி. குஞ்சிதபாத

அகில இலங்கை
சிவப்பிராமண

ஃ ஃ

## 3-ந் தி

இலங்கை,
சாங்கங்கள் ஆ
சனம் பற்றி
திகதிகளில்
ளன. இவ்வி
பற்றி பெ
சைவப் பெ
தர்மகர்த்
ஆலோசனை செ
இலங்கை ப
மார்கழி மாதம்
யைக்குறித்துள்
இங்கு மார்க
தியை (18-12-6
வதே நலம்.

சிவஸ்ரீ

கோவி

# நேரு, எங்கள் 'சாச்சா' ம

— கே. ஈஸ்வர தத்தர் —

நேருவை உருவாக்கியவர் மூவர். ஒருவர் அவருடைய கீர்த்தி மிக்க தந்தை ஸ்ரீ மோதிலால் நேரு, மற்றவர் பாரதத்தின் தந்தை மகாத்மா காந்தி, மூன்றுமவர் நோபால் பரிசு பெற்றவரும் உலக மகாகவி ரவீந்திரநாத் தாகூர். முதலாமவர் நேருவுக்கு அதிகாரத் தன்மையையும் பெருமையையும் அளித்தார்; இரண்டாமவர்பணி, கடமை ஆகியவற்றை புகட்டினார்; மூன்றுமவர் சர்வதேச நோக்கையும் பண்பாட்டையும் அளித்தார்.

நேரு எப்பொழுதும் சுயமாகவே பொதுஜனக்கூட்டங்களுக்கு கவரப்பட்டார். அவர் ஓர் இயற்கை ரசிகன். இந்தியாவின் மலைச்சிகரங்களையும் பள்ளத்தாக்குகளையும் அவர் நேசித்தார். வானில் ஜொலிக்கும் நட்சத்திரங்களையும் பறவைகளையும் மிருக ஜாதிகளையும் அவர் அன்புடன் கொஞ்சுவார். கிராமிய மக்களையும் சுசுசிகளையும் அவர் விரும்பினார்.

எல்லாவற்றிற்கும்மேலாக அவருக்கு குழந்தைகளுடன் சல்லாபிப்பதில் மிகவும் பிரியம். சில சமயங்களில் தம்மை மறந்தே குழந்தைகளுடன் விளையாடுவார்.

இயல்பாகவே அவர் குழந்தைகளுடன் அன்புகொண்டவர். ஆதலினல் அவரை குழந்தைகள் 'சாச்சா (மாமா) என்று அழைத்தார்கள். அவருடைய பிறந்த நாள் குழந்தைகள் தினமாக இன்று கொண்டாடப்படுகிறது. நாடு முழுவதிலும் நந்தவனங்களும், விளையாட்டு மைதானங்களும், நாடகக்கொட்டகைகளும் நேருவின் பெயருடன் விளங்குவதில் ஆச்சரியமில்லை.

நேரு ஒரு நாள் தமது பிறந்த நாளில் சொன்னார்: "குழந்தைகளுடன் பழக எனக்கு மிகவும் ஆனந்தம். அவர்களோடு கதைத்து அளவளாவி விளையாடுவது எனக்கு பிரியம். உலகத் தலைவர்களில் எவராவது இப்படி குழந்தைகளோடு விளையாடியவர்கிடையாது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் நேருவை விரும்பினார்கள். அதை அவரும் உணர்ந்தார். அவர் அழகை ரசிப்பவர். இயற்கை வளத்தையும் தமது சொந்த பூந்தோட்டத்தையும் பார்ப்பதிலேயே அவர் தமது கவலைகளை மறந்திருந்தார். அவருடைய தூய உள்ளத்தின் சின்னம்தான் அவருடைய கோட்டில் எப்பொழுதும் காணப்படும் ரோஸ் புஷ்பம்.

பாரதத்தில் வளரும் குழந்தைகள் எல்லாம் இன்றும் தங்கள் 'சாச்சா' மாமாவை நினைவு கூருவார்கள்.

நெடுந்தீவு

## மீனவர்க
## அடையாள

நெடுந்
நெடுந்தீவிலு
கள் யாவரும்
அட்டை வைத்
டுமென அர
ஆணை பிறப்பி
ளது. அவர்க
மீன்பிடித்தாலு
கடலில் மீன்
சரி அல்லது
லும் மீன்பிடித்
கட்டாயமாக
அட்டை எடுத்
டும். அநேகமா
இங்கு கட
சென்று மீன்
இந்த அடையா
யைஎப்படி நல
சாக்கலாம் எ
களுக்குப் பிரச
மென நம்பப்ப
இவர்களின்
அட்டைகளைப்
கான விண்ண
கள் இங்கு
சேவையாளரா
கிக்கப்பட்டுவரு
களின் படங்க
தற்கு அரசாங்
பிடிப்பாளரை
துள்ளதாகவும்
இங்குவந்து
படம் பிடிப்ப
றும் அதன் செ
வர்களே செலு
ஒமனவு அறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ண்பன்

...றந்ததினத்தையொட்டி
...ள்ளி ராதாகிருஷ்ணன்

...இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினர். எமக்குள் உள்ள வேற்றுமைகளை நல்லெண்ணத்தோடும், சிநேகப் பான்மையோடும் தீர்க்கவேண்டும். விறைப்பான மனேபாவம் இருக்கப் படாது. உலகில் மாறுபாடுகள் இருக்கலாம், ஆனல் ஆக்கிரமிப்புக்கு இடமில்லை.

வருங்காலத்தில் பூரண நம்பிக்கை வைத்து வீறு கொண்ட உள்ளத்துடன் முன்னேறுவோமாக!

# ...தரிசனம்

...இதற்கு ஆவன செய்வதே சிறப்பு.

சி. குஞ்சிதபாதக் குருக்கள்,
காரியதரிசி.
அகில இலங்கை
சிவப்பிராமண சங்கம்.

ஃ ஃ ஃ

## 3-ந் திகதி

இலங்கை, இந்திய பஞ்சாங்கங்கள் ஆருத்திரா தரிசனம் பற்றி வெவ்வேறு திகதிகளில் குறிப்பிட்டுள்ளன. இவ்விஷயத்தைப் பற்றி பொதுமக்களும், சைவப் பெரியார்களும் தர்மகர்த்தாக்களும் ஆலோசனை செய்கின்றனர். இலங்கை பஞ்சாங்கங்கள் மார்கழி மாதம் 3-ந் திகதியைக்குறித்துள்ளன. ஆகவே இங்கு மார்கழி 3-ந் திகதியை (18-12-67)-ல் கொள்வதே நலம்.

சிவஸ்ரீ சி. நடராஜக்
குருக்கள்,
கோவில் அர்ச்சகர்.

# ...சா' மாமா

நெடுந்தீவு

## மீனவர்களுக்கு அடையாளஅட்டை

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவிலுள்ள மீனவர்கள் யாவரும் அடையாள அட்டை வைத்திருக்கவேண்டுமென அரசாங்கத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கரையில் மீன்பிடித்தாலும் சரி, ஆழ் கடலில் மீன்பிடித்தாலும் சரி அல்லது இருவகையாலும் மீன்பிடித்தாலும் சரி கட்டாயமாக அடையாள அட்டை எடுத்தேதிரவேண்டும். அநேகமான மீனவர் இங்கு கட்டுமரங்களில் சென்று மீன்பிடிப்பதால் இந்த அடையாள அட்டையைஎப்படி நனையாது பாதுகாக்கலாம் என்பது இவர்களுக்குப் பிரச்னையைத் தருமென நம்பப்படுகிறது.

இவர்களின் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பபத்திரங்கள் இங்குள்ள கிராம சேவையாளரால் விநியோகிக்கப்பட்டுவருகிறது. இவர்களின் படங்களை எடுப்பதற்கு அரசாங்கமே படப்பிடிப்பாளரை ஒழுங்குசெய்துள்ளதாகவும் அவர்கள் இங்குவந்து மீனவர்களைப் படம் பிடிப்பார்கள் என்றும் அதன் செலவை மீனவர்களே செலுத்தவேண்டுமெனவு அறியப்படுகிறது

# பல்கலைக் கழகங்களும், பெயர் மாற்றங்களும்

இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களுக்குள்ளே இப்பொழுது ஒரு புதுப் புழு துடிக்கிறது. நாம கரணப் புழு.

பேராதனையில் இடவசதி இல்லாதமையாலும வேறு சில காரணங்களுக்காகவும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவு கொழும்பில் இருந்து வந்தது. கொழும்பிலுள்ள இப்பகுதிக்கு கொழும்பு பல்கலைக்கழகம் என்று பெயர் வைக்கத் தீர்மானித்தார்கள். இதைக் கொழும்புப் பகுதி மாணவர்கள் ஆட்சேபித்தார்கள். இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற பெயரைவிட கொழும்புப் பல்கலைக்கழகம்என்ற அபெயர் தரம் குறைந்ததென்றுஅவர்கள் நினைத்தார்கள்.

உடனே இலங்கைப் பல்கலைக் கழகம் [கொழும்பு] என்றுபெயர்வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதைக் கண்டதும் களனியிலுள்ள வித்தியாலங்கார பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் பல்கலைக்கழகத்தையும் இலங்கைப் பல்கலைக்கழகம் [களனி] என்று பெயர் வைக்க வேண்டுமென்றும் கோருகிருர்கள். இதற்காக அவர்கள் நேற்று முன்தினம் படிப்புக்கே போக மறுத்து நின்று விட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் அல்லது வேறெங்காவது தமிழ் பகுதியொன்றில்ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமோ அல்லது இந்துப் பல்கலைக்கழகமோ ஏற்படும்போது இங்குள்ள மாணவர்களும் இலங்கைப் பல்கலைக் கழகம் [யாழ்ப்பாணம்] என்று பெயர்வைக்க வேண்டுமென்று வாதாடுவார்களோ?

வித்தியாலங்கார, வித்தியோதய பல்கலைக்கழகங்கள் பிரதானமாக, பௌத்தம், சிங்களம், பௌத்த கலாச்சாரம்முதலியவற்றை வளர்ப்பதற்காக உண்டான பல்கலைககழகங்கள். அவற்றுக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் என்று பெயர்வைப்பது சரிதானு?

பெயர் ஒருபுறமிருக்கட்டும், அண்ணே! எங்கள்யாழ்ப்பாணத்துக்கோ அல்லது திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவனியா, புங்குடுதீவுக்கோ எப்போது பல்கலைக்கழகம் வரப்போகுதாம் என்று கேட்குது ஒரு சகோதரப்பத்திரிகைக்குருவி.

## மீண்டும் சில்வஸ்பிறே சேவை

நெடுந்தீவு, திங்கள்

இரண்டு வாரங்கள் எஞ்சின் கோளாறு காரணமாக ஓய்வெடுத்துக்கொண்ட பின் மீண்டும் சில்வஸ்பிறே சேவையில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் தனியார் படகொன்றும் சேவையில் ஈடுபட்டுள்ளது. பிரயாணத்தைப் பொறுத்தவரையில் இவ்விரு மோட்டார் படகுகளும் பிரயாணிகளுக்கு ஓர் அளவு வசதி அளித்துள்ளதே எனக் கூறலாம். சில்வஸ்பிறே பழுதடைந்தாலும் தொடர்ந்து தனியார் மோட்டார் படகு சேவையில் ஈடுபடுமாம். இதனுல் தனியார் படகையும் பலர் ஆதரித்து வருகிருர்கள்.

## "ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டு"

சுழிபுரம், திங்கள்

"யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகள் செய்ய முன்வராத பணியை, நாவலர் கல்வி நிலையம் செய்வதையிட்டு, நான் பெருமையடைகின்றேன். நாவலர் நிலையத்தினர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மாணவர்களுக்குப் போதிப்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அவர்களின் முயற்சி மேலும் வளர்ச்சியடைய எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்" என பண்டத்தரிப்பு நாவலர் கல்வி நிலையத்தினர் அளித்த ஒரு வரவேற்புபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப்பேசிய யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. வேணன் அபயசேகரா குறிப்பிட்டார்.

# நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

நமது அரும் பெரும் தலைவர்களின் விடாமுயற்சியாலும், அடாத் தொந்தரவினுலும் தமிழ்ப்பகுதிகளுக்கு மிக விரைவில் ஒருவிதமான 'கலகமும்' கிடைக்கப்போவதில்லை. ஒருவர் தமிழ்ப்பல்கலைக் கழகம் வேண்டுமென்று வாதாட, மற்றவர் இல்லை இந்துப்பல்கலைக்கழகம்தான் வேண்டுமென்று கூச்சல் போட, சிங்கள அரசு பீடத்தினர் இதுதான்சமயம்என்று நினைத்து இரண்டுமே கிடையாது போங்கள் என்று கூறிவிட்டார்கள்.

ஆகையால் எங்களுக்கு இந்த பெயர் பிரச்னை என்பது கிடையாது. பல்கலைக் கழகம் வந்தபின் பார்த்துக் கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

நீரிலிருந்து தான் நிலத்தில் உயிர்வகை உற்பத்தியானதென்று இன்றையவிஞ்ஞானிகள் கருதுகிருர்கள். சமுத்திரத்திலுள்ள கண்ணுக்குத்தெரியாதஜந்துகள் அலைகளால் உந்தப்பட்டு கரைக்கு வந்து பின்னர் ஊர்வன, பறப்பன, நடப்பன போன்ற உயிரினங்கள் ஆகியனவாம் இந்த பரிணாமத்தின் உச்சக் கட்டம்தான் மானிடன்.

நிலத்தரையிலுள்ள மானிட வர்க்கத்துக்குப் போதிய உணவுஇப்பொழுது நிலப்பரப்பில் இல்லை. ஆகையால் மறுபடியும்உயிர்வகை உற்பத்தியான கடலையே நாடவேண்டியிருக்கிறது.

கடற்கரையிலிருந்து நாம் லொறிகளிலும் வண்டிகளிலும் இழுத்துக்கொண்டு போய் தென்னம்பிள்ளைகளுக்குப்பசளையாகக் கொட்டுகிறோமே சாதாளை! ரிப்பன் போன்ற இந்த பச்சை நிற வஸ்துவில் ஏராளமான உணவுச் சத்து இருக்கிறதாம்.

கூடுதலான ஜனத்தொகையும் குறைவான நிலப்பரப்புமுள்ள ஜப்பானின் கடற்சாதாளையிலிருந்து பலவிதமான ருசியான உணவுப் பொருட்களை செய்கிருர்கள். அதுமட்டுமல்ல உள்நாட்டுப் பகுதிகளிலும் சாதாளை முதலிய கடற்பொருட்களை வளர்க்கிருர்கள்.

சாதாளை வர்க்கத்திலிருந்து பல அரிய ரசாயனப்பொருட்களையும் பெற முடியுமாம். இலங்கையைச் சுற்றிவரவுள்ள கடற்கரைகளில் எத்தனையோ விதமான கடற்பொருட்கள் கிடைக்கின்றன. ஜப்பானியரைப் போல நமது விஞ்ஞானிகளும் இவற்றை மனிதருக்கு உபயோகப்படும்படி செய்ய வேண்டும்.

## அச்சுவேலியிலும் சமாதானக் குழு தெரிவு

யாழ்ப்பாணம், செவ்.

அச்சுவேலியில் நடந்த கலவரங்களைதொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள நிலைமையை சமாதானமாக தீர்த்துவைப்பதற்காக, நேற்று இரு சமூகத்தவர்களையும் கொண்ட ஒரு சமாதான கமிட்டி நிறுவப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த இம்மகாநாட்டில் இச்சமாதானக் கமிட்டி நிறுவப்பட்டது.

சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர்களான திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. ஜி. நல்லையா ஆகியோரும் பெரும்பான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த நால்வரும், இம் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

கலவரத்தினுல் அச்சுவேலியில் ஏற்பட்ட நிலைமைபற்றி விரிவாக ஆராயப்பட்டது. அச்சுவேலி பிள்ளையார் கோவில் பிரவேசம் பற்றியும்இம்மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. கோவில் முகாமையாளரால் கொடுக்கப்பட்ட தவணை இம்மாதம் 15-ம்தேதியுடன் முடிவடைவதால் அதுபற்றிய முடிவு என்னஎன்பதை கூறவேண்டும் என சிறுபான்மை சமூகத்தவர் சார்பில் கேட்கப்பட்டது.

ஆலயங்கள் மட்டுமன்றி தேநீர்க்கடைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் பற்றியும் முடிவு செய்ய வேண்டியிருப்பதால் கடைக்காரரை கலந்தாலோசிப்பதற்கு அவகாசம் வேண்டுமென மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

17-ந் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டதோடு, இரு சமூகத் தவரையும் கொண்ட ஒரு சமாதான கமிட்டி நிறுவப்பட்டது. இக்கமிட்டி யிலுள்ளவர்கள் அச்சுவேலியிலுள்ள நிலைமையை நேரில் ஆராய்வார்கள்.

அச்சுவேலி 'சமாதானக் கமிட்டி' அங்கத்தவர்கள் வருமாறு: திருவாளர்கள்: எஸ். வைத்திலிங்கம், சிவசம்பு, வி. சபாரத்தினம் திருக்கண்டு, சிவக்கொழுந்து எம். திருவிளங்கம், ஆர், வி. இராமசாமி, எஸ். கிருஷ்ண பிள்ளை, தேவராசா, எஸ். இரத்தினம், எஸ். கே. நல்லதம்பி, வி. கிருஷ்ணபிள்ளை, எம். மயிலு, ரி. துரையர், வி. கணேசன், ஈ, இரத்தினம், சிவலால்சிறுபான்மைதமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்களான திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. ஜி, நல்லையா ஆகியோரும்இக் கமிட்டியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சமாதானக்கமிட்டி 17ந் திகதி பிற்பகல் கூடி அங்குள்ள நிலைமைபற்றி ஆராய இருக்கிறது.

# கிராம அபிவிருத்தி பற்றி மூன்று நாள் கருத்தரங்கம்

## நெடுந்தீவில் நாளை ஆரம்பம்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் கிராம அபிவிருத்தி இயக்கக் கருத்தரங்கை நெடுந்தீவு காரியாதிகாரி திரு. ரி. வேல்நம்பி ஒழுங்கு செய்துள்ளார். இம்மாதம் 15, 16, 17-ம் திகதிகளில் இக் கருத்தரங்கு நெடுந்தீவு காரியாதிகாரி கந்தோரில் நடைபெறும். இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு இங்குள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றை காரியாதிகாரி கோரியுள்ளார். கருத்தரங்கு 15-ந் திகதி காலை 10. மணிக்குத்தொடங்கும். அதையடுத்து 'அபிவிருத்தி வேலைகள்' என்னும் பொருள் பற்றி சிறுகுடிசைக் கைத்தொழில் பரிசோதகரும் 'சமூக வேலைகள்' பற்றி உதவி டைரக்டரும் 'கிராம அபிவிருத்தித் திட்டம் பற்றி கிராம அபிவிருத்திப் பகுதி அதிபரும், "சமூக முன்னேற்ற வேலைகள்பற்றி" அச்சுவேலியிலுள்ள கிராம அபிவிருத்திப் பயிற்சி' நிலையத்தின் பொறுப்பதிகாரியும் "எங்கள் சுகாதாரப் பிரச்னைகள்" பற்றி நெடுந்தீவு வைத்திய அதிகாரியும் பாடசாலையும் சமுதாயமும் பற்றி நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபரும் இன்னும் பலரும் இம் மூன்று நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுவார்கள்.

## மரம் நாட்டு விழாவில் மாணவருக்குப் பாராட்டு

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இன்று மரம் நாட்டு விழா நடைபெற்றது. இவ் விழாவை மாணவிகள் தேசிய கீதம்பாட கூடிநின்றோர் கரகோஷம் செய்ய வவனியா மாவட்ட அதிபர் திரு. டீ.சி. பெரேராதேசிய கொடியைஏற்றி ஆரம்பித்து வைத்தார். அவர் குறிப்பிட்டதாவது:—இன்று அரசாங்கம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றது இதன் காரணமாகவே பாடசாலைமாணவரும் உணவு உற்பத்தியில் பங்கு கொண்டு நாட்டுத்தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதில் அக்கறைகாட்ட வேண்டும் எனத் தேசிய அரசாங்கம் விரும்புகிறது. சென்ற சில தினங்களாக முல்லைத்தீவில் வயல்களில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவ மாணவிகளும், ஆசிரியர்களும் களைபிடுங்கி வருவதைக் கண்டு தேசிய அரசாங்கத்தின் சார்பிலும் எனது சார்பிலும் நன்றி கூறி இன்னும் இவ்வியக்தில் பங்கு கொண்டு நாட்டுக்குச் சேவை செய்யும்படி வேண்டுகிறேன். வவனியா கல்வி ஆலோசகர் திரு. கே. கனகசபாபதியும் பேசினுர். மகாவித்தியாலய அதிபர் திரு. ஆர். இராசநாயகம் நன்றி கூறினுர்.

## "இடமாற்றம் சம்பந்தமாக விழிப்பாக இருக்கவேண்டும்"

### ஆசிரியர் சங்க கூட்டத்தில் பேச்சு

உரும்பராய், செவ்.

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் முதுகெலும்பு போன்றது வட இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம். எங்கள் கிளைச்சங்கங்களின் வளர்ச்சியிலேயே தாய்ச்சங்கத்தின் வளர்ச்சியும் தங்கியுள்ளது. ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக நமது சங்கம் விழிப்பாக இருக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோரில் நடந்த வடஇலங்கை தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிப் பேசிய சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்று ஏழு வருடங்களாகியும் ஒரு திட்டமுமின்றி அரசாங்கம் விசேடமாகத் தமிழ் ஆசிரியர்களை இடமாற்றம் செய்து வருவது வேதனைக்குரிய விஷயமாகும். இப்படியான திட்டமற்ற இடமாற்றங்களினுல் ஆசிரியர்கள் திண்டாடுகிருர்கள். சங்க அங்கத்தவர் ஒருவருக்குத்தானும் நீதியீனம் நடந்தாலும் இறுதி வரை சங்கம் போராடும்.

அரசாங்கத்தின் திட்டமற்ற இடமாற்றத்தை இக் கூட்டத்தில் பல ஆசிரியர்கள் கண்டித்துப்பேசினர்.

அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா கூறியதாவது: ஆசிரியர்களாகிய நாங்கள் எங்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் சிந்திக்க வேண்டும். இந்நாட்டிலுள்ள ஒரு லட்சத்திற்குமேற்பட்ட ஆசிரியர்களும், தம்மைப் பற்றித்தாமே எப்பொழுது நன்கு சிந்திக்கத் தொடங்குகிருர்களோ அப்பொழுது தான் ஆசிரியர் சமுதாயம் ஒரு உச்சநிலையையடைய முடியும்.

நம்மை சிந்திக்கவைப்பதற்காகவே அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சம்மேளனம், பன்னிரு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. கிராமம் கிராமமாக பன்னிரண்டு கோரிக்கைகள் பற்றி பிரசாரம்செய்ய வேண்டும்.

## 'நுண்தொழில் இளைஞன்'

உடுவில், திங்கள்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்ப பாடசாலை மாணவ மன்றத்தினுல் வருடம் தோறும் வெளியிடப்பட்டுவரும் நுண்தொழில் இளைஞன்' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை மாலை மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கிளிநொச்சி எம்.பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் சஞ்சிகையை வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

## நீர்மேல் சைக்கிள் சவாரி

சுழிபுரம், திங்கள்

மலையகத்தை சேர்ந்ததிரு. எஸ்.எம். இராமக்கிளி என்பவர் மாதகல் பானுவெட்டி குளத்திலுள்ள தண்ணீர்மேல் சைக்கிள் ஓடிக் காண்பித்தார். வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா முன்னிலையில் நடைபெற்ற இந்த சைக்கிள் ஓட்டத்தை நூற்றுக்கணக்கானோர் கண்டுகளித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ட்சபையில்

# "திருமலைத் துறைமுக தேசியமய எதிர்ப்புக்கு திராவிடஸ்தான் காரணமா?"

— திரு. றெஜி. பெரேரா

## "தேசீயமயத் தீர்மானம் நிலைநிற்கும்; மாருது"

— நீதிமந்திரி

கடந்த சனிக்கிழமையன்று செனேட் சபை கூடியபோது, செனட்டர் றெஜிபெரேரா, பிரதமருக்கும் சமஷ்டிக்கட்சிக்குமிடையே ஏதாவது இரகசிய உடன்படிக்கை உண்டா வென்பது பற்றிக் கேட்டார். அத்துடன் திருக்கோண மலைத் துறைமுக தேசியமயத்துக்கு சமஷ்டிக்கட்சியினர் காட்டும் எதிர்ப்பைக் குறிப்பிட்டு, தி. மு. க.வுக்கும்சமஷ்டிக்கட்சிக்குமிடையே இரகசிய ஏற்பாடொன்று பற்றித் தாம் ஏற்கனவே கூறியுள்ளதாகவும் செனட்டர் றெஜி பெரேரா நினைவூட்டினர்.

அவர் பேசியதன் ஒரு பகுதியையும், அதற்கு செனட்டர் கௌரவ விஜயமான்ன அளித்த பதிலையும் இங்கு தந்துள்ளோம்.

**செனேட்டர் ஏ. றெஜினல்ட் பெரேரா:**

"சபாநாயகர் அவர்களே, ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டரசாங்கத்தை அமைப்பதற்கென, சமஷ்டிக் கட்சியுடன் பிரதமர் ஏதாவது இரகசிய உடன்படிக்கைக்கு வந்துள்ளாரா என்பதை அறிவிப்பது அவரது கடமை என நான் இச் சபையில் பல தடவைகள் வலியுறுத்தியுள்ளேன். இத்தகைய உடன் படிக்கையின் போட்டோப் பிரதிகளெனக் கருதப்படுபவற்றைச் சில பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. அவை பொய்யென்றால், பிரதமரோ அல்லது அரசாங்கமோ அது பற்றி நடவடிக்கை எடுக்காததும், மறுப்பு எதுவும் தெரிவிக்காததும் விந்தையே.

இப்போது, திருக்கோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்படுவதை சமஷ்டிக் கட்சியினர் எதிர்க்க முனைந்துள்ளதைக் காண்கிறோம். தி. மு. க. திராவிடஸ்தானை நிறுவினுல், திருக்கோணமலை திராவிடஸ்தானின் துறைமுகமாக இருக்குமெனத் தி. மு. க.வுக்கும் சமஷ்டிக் கட்சிக்குமிடையே ஒரு ஏற்பாடு உண்டென நான் இச்சபையில் சோதிடம் கூறியிருந்தேன். திருக்கோணமலைத் துறைமுகத் தேசிய மயத்தை எதிர்ப்பதன் மூலம் சமஷ்டிக் கட்சி மேற்கொண்டுள்ள தற்போதைய நிலை, சமஷ்டி ரீதியாக இந்நாட்டைப் பிரிப்பதை விட அதிகமானதை அவர்கள் நாடுகிருர்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

சபாநாயகர் அவர்களே, சர்வதேச அல்லது உலக முக்கியத்துவம் அல்லது தேசிய முக்கியத்துவம் பொருந்திய ஒரு துறைமுகத்தைத் தேசிய மாக்கக் கூடாது என ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சி, மத்திய அரசிடம் வலியுறுத்துவதோ அல்லது கூறுவதோ நிகரற்ற அரசியல் படுசுட்டித் தனமாகும். சமஷ்டிக் கட்சியின் அரசியலுக்குப் பின்னுலுள்ள சதியை அது வெளிப்படுத்துகிறது.

சில அரசியல் காரணங்களுக்காகப் பிரதமர், சமஷ்டிக் கட்சியுடன் சில உடன்படிக்கைகளுக்குச் சம்மதித்திருந்தாலும், இந்தக் கடைசிக் கட்டத்திலும், பிரதமரை - ஐ தே. கட்சியின் தலைவர் திரு. டட்லி சேனுநாயக்காவையல்ல- பிரதமர் திரு. டட்லி சேனுநாயக்காவை, இந்த நாட்டு மக்களை நம்பிக்கைக்கு எடுத்துக் கொண்டு, சமஷ்டிக் கட்சி எவ்வளவு தூரம் அரசியல் பயமுறுத்தற் கொள்ளை செய்துள்ளது என்பதை அம்பலப்படுத்தி, இத்தகைய சமஷ்டிக் கட்சி வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராட, இந்த நாட்டின் வகுப்புவாதமற்ற சிங்களவர், தமிழ் மக்களைத் தயார் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

செனேற்றர் கௌரவ விஜயமான்ன!

செனேட்டர் ரெஜி பெரேரா நேரத்துக்கு வந்துவிட்டார்-

[7-ம் பக்கம் பார்க்க]

### கந்தசஷ்டி

யாழ்ப்பாணம், செவ்.

கைதடி அரசினர் வயோதிபவிடுதியில் நடைபெற்ற சைவ சமய பிரசாரக் கூட்டத்தில் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி "கந்தசஷ்டி" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினுர்.

இறைவனுடைய கருணையைப் பெறவேண்டுமானுல் கடவுள் வழிபாடு அவசியம். சைவசமயத்தவராகிய நாம் மிகவும் பாக்கியசாலிகள். ஏனெனில் பல வகைப்பட்ட விரதங்களை அனுட்டிக்கும் வாய்ப்பு நமக்குண்டு. அத்தகைய விரதங்களுள் 'கந்தசஷ்டி' விரதம் சிறந்த விரதம் என்று அவர் கூறினுர். திரு. சி. யோகநாதன் நன்றியுரை கூறினுர்.

---

### "நஷ்ட ஈடு வழங்கவேண்டும்"

காங்கேசன்துறை, திங்கள்

"சமீபத்தில சில இடங்களில் நடைபெற்ற கலவரங்களினுல சிறுபான்மைத் தமிழர்கள் வீடுகள் சேதம் விளைவிக்கப்பட்டன. அவர்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்' என்ற தீர்மானம் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டது.

தெல்லிப்பழையில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு திரு எஸ் வேதநாயகம் தலைமைவகித்தார். பலரும் உரை நிகழ்த்தினர்.

---

### எதிரிகளுக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, திங்கள்

ஐயாமுத்து இராமதாஸ் என்பவர்நான்கு அவுன்ஸ்நிறையுள்ளகஞ்சாவைதிருந்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில்மாஜிஸ்திரேட்திரு. கே. விக்னராசா எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 200ரூபா அபராதம் விதித்தார்.

ஐயம்பிள்ளைகாங்கேசு என்பவரும் கதிர்காமு அருணுசலம் என்பவரும் சட்டவிரோதமாக மதுபானம் விற்றதாகதாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளில் எதிரிகளுக்குத் தலா 100 ரூபா அபராதம்விதிக்கப்பட்டது.

---

### தொண்டர்படை புனரமைப்பு

உடுப்பிட்டி, திங்கள்

வடமராட்சியில் கிராமத் தொண்டர்படை புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றது. இதனை முன்னிட்டு வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன்வடமராட்சிப்பிரிவிலுள்ள சகல கிராமசேவையாளர்கட்கும், கிராமசேவையாளர் பகுதிகளின் தொண்டர்படைகட்கும் ஆலோசனைக் கூட்டமொன்றில் கலந்துகொள்ளுமாறு அறிவித்தல் கொடுத்துள்ளார்.

---

### மேற்கிந்திய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரன ஸீன் கொன்னெரி ஆவார்

ஸ்தலைக்கழக ஆட்சிபீடத்தில், மாணவர்களின் நலன் சேர்லியரி கொன்ஸ்டடன் கவனித்துக் கொள்வார்.

### இந்தியப்.........

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

**திரு. வி. வி. கிரியின் கவலை**

இதற்கிடையில், இந்திய தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தும் என்ற நம்பிக்கையில் உருவாக்கப்பட்ட மொழிவாரி ராஜ்யங்கள், அந்த நம்பிக்கைக்கு எதிராக, தேசிய ஒற்றுமையின் சிதைவுக்கு வழிவகுத்துள்ளதாக இந்திய உபராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி குறிப்பிட்டுள்ளார்,

தேசிய ஒற்றுமை, ஆபத்தானநிலைக்கு ஆளாகியுள்ளது,வெட்கப்படவேண்டியதொன்று எனக் கூறிய திரு. கிரி, சரியான தலைமையில்லாத காரணத்தினால் நாடு வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிந்து செல்வதாகக் குறிப்பிட்டார்.


## பயிர்ச் செய்கைக்கு உதவும் டிராக்டர் சாரதி இவர்






நெல் முதலான உணவுப் பொருள்களுக்கெல்லாம் எங்கள் நாட்டு மக்கள் எப்பொழுதும் பிற நாடுகளையே நம்பியிருக்கும் நிலை மாற வேண்டும் இலங்கையின் பல பாகங்களிலும் கிடக்கின்ற காடுகளை அழித்து, நிலம் திருத்தி உழுது பண்படுத்திப் பயிர்ச் செய்கை செய்வதற்காக நாள் முழுவதும் தூங்காமல் உழைப்பவர் இவர் இவரும் இவரைப் போன்ற பிறரும் அயராமல் உழைத்தால். இலங்கை பழையபடி கிழக்கு நாடுகளின் தானியக் களஞ்சியம் என்னும் நிலைக்கே வந்துவிடும் இந்த வகையில் உழைக்கின்ற இவரது பணி எவ்வளவு முக்கியமானது.

ஓயாது உழைப்பவர்கள், முயற்சியால் உயர்ந்தவர்கள், முன்னேறிச் செல்பவர்கள் எல்லோரும் — மணத்துக்கும் குணத்துக்குமாக — எப்பொழுதும் விரும்பிப் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்.

**இவரும் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்**

LT. 2-67 A3NS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் திரட்டு

### கிழக்கில் பரிசோதனை

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சம்மாந்துறை பகுதியில் உள்ள கிணற்றில் மண்ணெண்ணெய் ஊற்று இருக்க கண்டு பிடிக்கப்பட்டதை தொடர்ந்து பிரான்ஸ் தேசத்து நிபுணர்கள் கிழக்கு இலங்கைப் பகுதியில் பரிசோதனை நடத்தவுள்ளார்கள், முதலில் சம்மாந்துறை பகுதியில் தான் பரிசோதனை நடக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.

ஃ ஃ ஃ

### நீச்சல் தடாகங்கள்

மட்டக்களப்பிலும் காத்தான்குடியிலும். இரண்டரை இலட்சம் ரூபா செலவில் இரண்டு நீச்சல் தடாகங்களை அமைக்க விளையாட்டு அமைச்சு முடிவு செய்துள்ளது. இந்த நீச்சல் தடாகங்களை அமைப்பது சம்பந்தமாக விளையாட்டு அமைச்சின் டைரக்டர் டாக்டர் எஸ். ஏச். ஆர். குணவர்த்தன, தேசிய நீச்சல் பயிற்சியாளர் திரு கெய்திடமென் ஆகிய இருவரும் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து மாவட்ட அதிபர் திரு கதிர்காமநாதன், உதவி மேயர் ஜனுப் லத்தீப் சின்னலெப்பை ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

### உணவு உற்பத்தி

பூண்டுலோயா ஆசினர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும், சிரமதான இயக்க மூலம், உணவு உற்பத்தியில் தீவிரமாக இறங்கியுள்ளனர். வித்தியாலயத்தை சுற்றியுள்ள நிலங்களைப் பண்படுத்தி அவ்வயல்களில் ஜப்பான் முறையைப்பின் பற்றி உப உணவு பயிரிடுகின்றனர்.

ஃ ஃ ஃ

### கூட்டுப் பிரார்த்தனை

தைப்பொங்கல் தினத்தன்று நாவலப்பிட்டியில் கூட்டுப்பிரார்த்தனை விழா ஒன்று நடாத்த ஆத்மஜோதி நிலயத்தினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

ஃ ஃ ஃ

### பயங்கரக் கொள்ளை

மாதம்பை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த தம்பகல்லை என்னுமிடத்தில் ஒரு வீட்டினுள் இரவு இரண்டு மணியளவில் பல பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்த ஒரு கொள்ளைக்கோஷ்டி, வீட்டுக்காரர் விழித்துக் கொள்ளவே, அவருடன் சுமார் 1 மனி நேரம் போராடியபின், கார் ஒன்றை திருடிச் சென்றது.

ஃ ஃ ஃ

### வெள்ள நிவாரணம்

சமீபத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 6 மாகாணங்களிலுள்ள மக்களுக்கு இதுவரை 12 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என சமூக சேவைப்பகுதி அறிக்கையொன்றில் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் 13 ஆயிரம் குடும்பங்கள் பயனடைந்துள்டன.

ஃ ஃ ஃ

### லங்கா 'சலுகல'

கடந்த அக்டோபர் மாதம் வியாபாரத்தை ஆரம்பித்த லங்கா சலுகல ஸ்தாபனம் இப்பொழுது கூ.மொ.வி. யிடமிருந்து 2 கோடி 50 லட்சம் ரூபாய் பெறுமதியான ஜவுளி கையிருப்பைப் பொறுப்பேற்றது.

'சலுகல' ஸ்தாபனம் அரசாங்கமும் பொதுமக்களும் கூட்டாக நடாத்தும் ஒரு ஸ்தாபனமாகும். அரசாங்க தரப்பில் கூ.மொ.வி. 51 லட்சம் ரூபாவும், பொதுமக்கள் தரப்பில் 49 லட்சம் ரூபாவுமாக மொத்தம் ஒரு கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

### லுணுவை வழக்கு

பதினொருவயது சிறுமியை பலாத்காரம் செய்ய முயற்சித்ததாக கூறப்படும் லுணுவை வாடிவீட்டு சம்பவ வழக்கு விசாரணை இம்மாதம் 15-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பாணந்துறை நீதிபதி திரு. எவ். ஏ. டயஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 1-ம் எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் வைத்திய அத்தாட்சிப் பத்திர மொன்றைசமர்ப்பித்துவிசாரணையை ஒத்திப்போடும்படி கேட்டுக்கொண்டார். நீதிபதி விசாரணையை 15-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

ஃ ஃ

### ஸ்ரீ கணபதி ஆலயம்


அனுராதபுரம் புதிய நகரில் உள்ள ஸ்ரீ கணபதி ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. முன்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரி வளவிற்குள் இருந்த இந்த ஆலயம் பின் வேறிடத்திற்கு மாற்றப்பட்டது.

---

## "சமயமின்றேல் பேரின்பமில்லை"

உடுவில், திங்கள்

"அரசியல் துறையில்இளைஞர்கள் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்களோ அவ்வளவு ஆர்வம் சமய வளர்ச்சியிலும் காட்டத்தவறக் கூடாது. சமயம் மக்களுக்கு கண்போன்றது. கண் இன்றி எவ்வாறு நாம் எந்த இடத்திற்குப் போகவும், அல்லது எந்தப் பொருளை அறியவும் முடியாமல் இருக்கின்றதோ அதேபோன்றுதான் சமயமின்றி ஆன்ம ஈடேற்றமோ, பேரின்பமோ அடைய எம்மால் முடியாது என்பது வெளிப்படை" என்று உடுவில் ஞானவைரவர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றகூட்டுப்பிரார்த்தனையின்போது திரு. எம் மார்க்கண்டு கூறினர். திரு வைரமுத்து பொன்னம்பலம் நன்றி கூறினர்.




## வென்றது

உடுவில், திங்கள்

சுன்னாகம் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் குப்பிளான் தெரிவுக்கோஷ்டிக்குமிடையில் நேற்றுப் பிற்பகல்சுன்னாகத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியொன்றில்சுன்னாகம் சென். தோமஸ் விளையாட்டுக்கழகம் 2-0கோல்களால் எதிர்க் கோஷ்டியைத் தோற்கடித்தது. திரு எம். செல்வநாயகம் இப்போட்டிக்கு மத்தியஸ்தம வகித்தார்.

---

## விளையாட்டுக்கழக நிர்வாகிகள்

உடுவில், திங்கள்

சென்ற வாரம் இணுவிலில் புதிதாக அங்குரார்ப்பணம செய்து வைக்கப்பட்ட இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். சுந்தரலிங்கம் உபதலைவர் திரு. எம். மகேஸ்வரநாதன், செயலாளர் திரு. வை. விநாயகமூர்த்தி. உபசெயலாளர் திரு. எம். மார்க்கண்டு தனதிகாரி திரு. எஸ் கணபதிப்பிள்ளை. நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## அறிவித்தும் நடவடிக்கை இல்லையாம்

சுளிபுரம், திங்கள்

சுழிபுரம் காளுவன் சந்திக் கருகாமையிலுள்ள முதலாம்மதகு அடைக்கப்பட்டதன் காரணமாக மழை நீர் தடைப்பட்டுள்ளதால் இப்பாதையால் செல்லும் பாடசாலை மாணவர் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். இது காரணமாக அச் சூழலிலுள்ள மக்கள் சளிச்சுரத்தினல் பீடிக்கப் படுவதுடன் ஏழை மக்களின் குடிசைகளும் சேதத்துக்குள்ளாகி வருகின்றன. காளுவன் சத்தியிலிருந்து ஐக்கிய சங்கவித்தியாசாலை நோக்கிச் செல்லும் பிரதான ஒழுங்கையும் வெள்ளத்தினல் மூழ்கிக் கிடக்கிறது. இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரைஎவ்வித நடபடிக்கையும்எடுககப்படவில்லையெனத் தெரிகிறது.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 14-11-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளைய சந்ததி வி. ஏ. திருஞானம்.

இரவு 6-15 பஜனை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 முத்திநெறி — சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 கதாப்பிரசங்கம் — வி. எஸ். கணேசுக்கத்...

## திருமலைத் துறைமுக . .

[6-ம பக்கத் தொடர்ச்சி]

**செனேற்றர் பெரேரா**

சரியான நேரத்துக்கு'

**செனேற்றர் கெளரவ விஜயமான்ன:**

எப்போதும் போல அவர் வந்து, ஒரு இரகசிய உடன் படிக்கைப் பிரச்னையைக் கிளப்பி விட்டார். - பலத்த சப்தத்துடன்! ஆனல், சில காலத்துக்கு முன்பே உடைக்கப்பட்ட புனை கதை இது. என்றாலும், இந்த விஷயங்கள் மீண்டும் மீண்டும் வந்து கொண்டேயிருக்கும்.

**செனேற்றர் பெரேரா**

வெடிப்பு வரும்.

**செனேற்றர் கெளரவ விஜயமான்னே:**

ஆம், ஆம். சிலர் இத்தகைய மனப்பான்மையுடன் இருக்கும் வரை, அது வரத்தான் செய்யும்.

பிரதமருக்கும் சமஷ்டிக் கட்சிக்குமிடையே ஒரு இரகசிய உடன்படிக்கை இருக்கிறதா என்ற பிரச்னையைக் கெளரவ செனேட்டர்கிளப்பியுள்ளார். எனது கெளரவ நண்பருக்குத் தெரிந்தது போல, அதற்கு கெளரவ பிரதமர் திட்டவட்டமான பதிலளித்திருக்கிறார். அவர், சமஷ்டிக் கட்சியுடன் தாம் செய்துகொண்டுள்ள உடன்படிக்கை, ஒரு கட்சித் தலைவர் என்ற முறையில், தமக்கும் ஒரு கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ளதென்றும், இந்நாட்டின் பிரதமர் என்ற முறையில் அது செய்யப்படவில்லை யென்றும்கூறியுள்ளார்.

சமஷ்டிக்கட்சியினர் இந்நாட்டில் சமஷ்டியை நிறுவ முயற்சிப்பதாகவும், அதை நிறைவேற்றுவதற்கு ஒரு வழியாக, அவர்கள் திருக்கோணமலைத் துறைமுக தேசியமயத்தை எதிர்ப்பதாகவும் கெளரவ செனேட்டர் கூறினர். அவர்கள் எதையும் எதிர்க்கலாம், அவர்கள் தமது மனதில் ஏதாவது வைத்திருக்கலாம். ஆனல் எமக்கு அதைப் பற்றிக் கவலையில்லை—

**செனேட்டர் ஹமீம்:**

ஓ, உங்களுக்கு கவலை இல்லையா?

**செனேட்டர் கெளரவ விஜயமான்ன:**

அவர்கள் மனதில் அவர்கள் என்ன வைத்திருக்கிறார்கள் என்பதில் எமக்குக் கவலையில்லை என்றே நான் கூறினேன். திருக்கோணமலைத்துறைமுகத் தேசியமயம் மாற்றமுடியாதவொன்று என்பதை நாம் தெளிவாகச் சுட்டிக்காட்டி விட்டோம், அதாவது, எது-

**செனேட்டர் டி' சூஸா:**

உமது சகா, செனேட்டர் கெளரவ திருச்செல்வம், பாராட்டுத் தெரிவிக்கக் காணோம்!

**செனேட்டர் கெளரவ விஜயமான்ன:**

தேசிய நலனுடையதே, அது செய்யப்பட்டே தீரும். இலங்கை ஒரு பிரிவாகவும், மற்றொரு பிரிவாகவும் இருப்பதென்னும் கேள்விக்கு இடமேயில்லை. தேசிய நலனுக்காக இந்த அரசாங்கம் எதையும் செய்தே தீரும். செனேட்டர் பெரேரா காட்டிய உணர்ச்சிகள் இதிலும் சிறந்த ஒரு சந்தர்ப்பத்துக்கு உகந்தவை. வேறொரு சந்தர்ப்பம்அவருக்குக்கிட்டுமென நான் நம்புகிறேன்.

---

## பயனுள்ள கல்வி வேண்டும்

உடுவில், திங்கள்

வவர்ந்துவரும் எந்த ஒரு பொருளுக்கும் அடிப்படை சிறப்பாக அமையவேண்டும். அடிப்படையில் ஆட்டம் இருப்பின் உருப்பெறும் பொருளும் ஸ்திரமற்றதாகிவிடும். எதிர்காலம் இளைஞர்களின் கைகளில் தங்கி இருக்கின்றது, நாட்டை நல்வழியில் நடத்த இளைஞருக்கு வேண்டுவது கல்வியறிவு அவர்கள் பெறும் கல்வி பயனுள்ளதாக கட்டுக்கோப்புடன் விளங்க வேண்டும். இலக்கியம், சமயம் மொழி போன்ற கல்விகளைக் கற்பதுடன் நின்று விடாமல் மாணவர்கள் பயன்தரக் கூடிய தொழில்நுட்ப விஞ்ஞானக் கல்விகளை கற்கமுன்வர வேண்டும் என யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலை வணிக மாணவர்களின் முதல் முயற்சியாகிய 'கன்னி' மாதாந்த சஞ்சிகையை முதன் முதலாக வெளியிகடு வைத்து உரை நிகழ்த்திய வணிக போதனசிரியர் திரு. ஏஸ். ஜெயசிங்கம் கூறினர் இவ் வைமவத்திற்கு செல்வன், எஸ். மகேந்திரநாதன் தலைமைவகித்தார்.

---

## திருவிழாவின்போது திருடினராம்

வல்வெட்டித்துறை திங்கள்

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோவிலில் கந்தசஷ்டி இறுதி நாளான சூரன் போர் தினத்தன்று இரவு நடராசாவின் மகள் சித்ராவின் 175 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை களவாடியதாக வல்வெட்டித்துறை பொலீஸாரால் ஏ.மயிலாசாமி என்பவரைக் கைது செய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்தபோது மாஜிஸ்திரேட் எதிரியை 300 ரூபா பிணையில் செல்லுமாறும மீண்டும் அடுத்த மாதம் 3-ம் திகதி கோர்ட்டில் ஆஜாராகும்படி உத்தரவிட்டார்


இனம் இனம் இனம்

பி. பி. பி. பென் இனம்

எங்களிடம் போண்ட்'ஸ் பவுடர் வாங்கிப் போண்ட்'ஸ் போட்டியில் பரிசுபெறுபவர்களுக்கு ஒரு பி. பி. பி. பென் இனம்.

இன்றே எங்கள் ஸ்தாபனத்தில் போண்ட்'ஸ் பவுடரை வாங்குங்கள்.

ராஜா ஸ்ரோர்ஸ்

போன் 372 | 67-69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | தந்தி ராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையை மகன் வெட்டினாராம்

யாழ்ப்பாணம், திங்கள்

தந்தைக்கும் மகனுக்குமிடையில் நடைபெற்ற வாக்குவாதத்தில் மகன் தந்தையைக்கத்தியால் வெட்டினாராம் இதனால் காயமடைந்த தந்தை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கரையூரில் இச்சம்பவம் நடைபெற்றது. முத்ததம்பி கார்த்திகேசு என்ற 45வயது நபரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டவராவார். காயமடைந்த கார்த்திகேசு அவரது மனைவியைத்தாக்கியதாகவும் இதனைத்தொடர்ந்தே அவரது மகன் கோபம் கொண்டு தந்தையைக் கத்தியால் வெட்டியதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது சம்பந்தமாக நடராசா என்ற வாலிபரைப் பொலிசார் தேடி வருகின்றனர். புலன் விசாரணை நடைபெறுகின்றது. [ந. நி.]

# கடல் அட்டை, சங்கு எடுக்க விஞ்ஞானமுறை

யாழ்ப்பாணம், திங்கள்

விஞ்ஞான முறையில் சுமார் ஒரு மணி நேரம் கடலுக்கு அடியில் கடல் அட்டை, சங்கு ஆகியவற்றை எடுக்கும் புதிய முறையொன்று யாழ்ப்பாணக்கடலிலும் விரைவில் விரிவுபடுத்தப்பட விருக்கின்றது.

இம்முறை இம்மாதம் 26-ம் திகதி யாழ்ப்பாணம் கல்முனைக் கடல்களிலும், மண்டைதீவுக் கடலிலும் பரீட்சார்த்தமாகச் செயல்படுத்தப்படவிருக்கின்றது. இப் புதிய முறையினால் ஒரு நேரத்தில் இருவர் கடலடிக்குச் சென்று கடலட்டை சங்கு ஆகியவற்றைச் சேகரிக்க முடியுமென நம்பப்படுகின்றது.

இம்மாதம் 26-ந் திகதி வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, வடபகுதி கடற்றொழிலாளர்சங்க சமாஜய தலைவர் திரு. இராசரத்தினம், கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர் திரு மதிபாலசிங்கம் ஆகியோர் முன்னிலையில் இது பரீட்சார்த்தமாக செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் சரியாக இங்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமானால் இங்கு மேலும் அதிகமாக கடலட்டை, சங்கு ஆகியனவற்றைச் சேகரித்து வெளிநாடுகளுக்கு வடபகுதி கடற்றொழிலாளர் சமாஜம் மூலம் அனுப்பி அதிக வருவாய் பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. [ந. நி.]

# காணிகள் வழங்கிய முறை ஆராயப்படும்

## மந்திரிசபை அவசர முடிவு

கொழும்பு, ஞாயிறு

விவசாயத்துக்கென விசேஷக் காணி குத்தகைசபையினால் வழங்கப்பட்டுள்ள காணிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளை நிறுத்தும்படி மந்திரிசபை உத்தரவிட முடிவுசெய்திருக்கின்றது.

இக்காணிகள் வழங்கப்பட்டுள்ள முறைபற்றி உடனடியாக ஆராய்ந்து தீர்மானிக்கப்படும்வரை விவசாய வேலைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாமெனக் கோர மந்திரிசபை முடிவுசெய்திருக்கின்றது.

மந்திரிகள் சிலரும் எம். பி. க்கள் பலரும் ஏராளமான காணிகளை காணி குத்தகசபையிடம் பெற்றிருப்பதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்தே மந்திரி சபை இம்முடிவை எடுத்திருப்பதாக நம்பப்படுகின்றது.

**டோக்கியோவில்**

# பொலிஸ் - மாணவர் கைகலப்பு

டோக்கியோ, நவ. 12

ஜப்பான் பிரதம மந்திரி சாட்டோ இன்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதற்காக விமான நிலையம் வந்தபொழுது சுமார் 300 மாணவர்களும் பொலிசாரும் கற்களாலும் பொல்லுகளாலும் அடித்துக்கொண்டனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனுடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக அவர் புறப்பட்டுச் சென்றார். இடதுசாரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறார்கள் என்று அறிந்ததும் விமான நிலையத்தில் சுமார் 7 ஆயிரம் பொலிசார் காவல் புரிந்தனர். சுமார் 6 ஆயிரம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

340 மாணவர்களை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

### தற்கொலை

சங்கானை, ஞாயிறு

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த வல்லியப்பர் இரத்தினசபாபதி [43] என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு, கே. சேனாதிராசா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

### 30-ந் திகதி பரீட்சை

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சித் தமிழாசிரியர் சங்கம் நடாத்தும் மூன்றும் வகுப்புப் பரீட்சை இம்மாதம் 30-ந் திகதி நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வடமராட்சியிலுள்ள சுமார் 40 பாடசாலைகளைச் சேர்ந்த 1200 மாணவர்களும், மாணவிகளும் இப்பரீட்சையில் பங்கு பற்றவிருக்கின்றனர். 32 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும்.

### "அமெரிக்காவில் புரட்சி நடக்கும்"

புன்னாலைக்கட்டுவன் ஞாயிறு

"ஏகாதிபத்திய முரண்பாடுகள் முற்றி வளர்ந்துள்ள அமெரிக்காவின் இன்றைய நிலையை நோக்குமிடத்து இன்னும் பத்து ஆண்டுகளில் அந்நாட்டில் ஒரு பெரும் புரட்சி ஏற்படஇடமுண்டுஎனத் தோற்றுகிறது. இப்பொழுது நீக்ரோ அல்லாத அமெரிக்கர்களே. நேரடியாகவும் பகிரங்கமாகவும் அமெரிக்க அரசாங்கத்தின் வியட்னாம் கொள்கையை எதிர்க்க ஆரம்பித்துவிட்டனர்' என்று லங்கா சமசமாஜக் கட்சியின்பிரமுகர் திரு. வி. காராளசிங்கம் இங்கு நடந்த அரசியல் வகுப்பொன்றில் கூறினார்.

### கூட்டுப்பிரார்த்தனை விழா

வட்டுக்கோட்டை, ஞாயிறு

வட்டுக்கோட்டை- கொட்டைக்காடு நொச்சியம்பதிப் பிள்ளையார்கோவில் கூட்டுப் பிரார்த்தனை 7-வது வருடாந்தவிழா சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவை முன்னிட்டு அன்று 'இறை அன்பு' என்னும் பொருள்பற்றி திரு, அ சண்முகதாஸனின்கதாப்பிரசங்கமும் யாழ்ப்பாணம் லிங்கம் கோஷ்டியினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இசை, நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### பால்மா பதுக்கல் கோட்டா நிறுத்தம்

யாழ்ப்பாணம், திங்கள்

பால்மா பொருளை வைத்துக் கொண்டு விற்கமறுத்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு வியாபாரிகளுக்கு "கோட்டா" நிறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் இந்த இரு வர்த்தக ஸ்தாபனங்களையும் திடீரெனச் சோதனையிட்டபோது இவர்கள் பால்மாப்பொருட்களை கடைக்குள் பதுக்கி வைத்துக் கொண்டு விற்க மறுத்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிஸாரின் உத்தரவைத் தொடர்ந்து இவ்வாரம்முதல் இவர்களுக்கு இப்பால்மா பொருட்கள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. (ந. நி)

### திருமலைத்......

[1ம் பக்கத்தொடர்ச்சி]

சங்க தொழிலாளர்கள் 300 பேர் 5 பஸ்களில் வந்திருந்தனர். இவர்களுடன் திருமலைத் துறைமுகத்தில் வேலை செய்யும் தொழிலாளர் சிலரும் சேர்ந்து கொண்டனர். வெற்றிவிழா நடத்தினார்கள். ஊர்வலத்தில் சிங்களத் தொழிலாளர்கள் 'கள்ளத்தோணி வெளியேறு' என்று கோஷமிட்டனர். அதற்கு ஏற்றபடி தமிழ்த் தொழிலாளர்கள் 'பைலா' போட்டார்கள். திருமலை வாழ் தமிழ்மக்கள் இதனைப் பார்த்து வேதனைப் [illegible]

அரசியல் நடவடிக்கைகளின் விளைவுகளை சாதா

# திருமலைச் செய்திகள்

### 40 000 பெட்டிகளை ஏற்றிச் செல்லும்

கடந்த 2 மாதகாலபொது வேலை நிறுத்தத்தின் பின்பு கொந்தராத்துவேலை முறையிலிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வேலைகள் கைமாறிய பின்பு முதல்முதலாக தேயிலை ஏற்றுமதிக்கு இங்கு வந்த 'கிளென்ஞகலல' என்னும் சரக்குக் கப்பலுக்கு 40000 பெட்டிகளில் அடங்கிய தேயிலை ஏற்றுமதியாக்குவதற்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது,

### கூலியாட்களின் மதிய உணவு

திருக்கோணமலை துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் கூலியாட்களுக்கு மதிய உணவுக்கென தலா 65 சதம் கொடுக்க நிர்ணயிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவர்களுக்கு இப்பணத்திற்குரிய உணவுப்பொட்டலத்தை விநியோகம் செய்தனர். ஆனால் இந்த உணவு இவர்களுக்கு நேரதாமதமாகிக் கிடைப்பதாகவும் உணவு மிகவும் குறைந்த ரகமானதாக இருப்பதாகவும் முறையிட்டதனால் இனிமேல்இந்த உணவுப் பொட்டலத்துக்குப் பதிலாக ஆளுக்கு ஒரு ரூபா வீதம் கொடுக்கப்படுமெனவும் தெரியவருகிறது.

### ஆமை வேக வேலை

கடந்த பல மாதங்கட்கு முன்பாக சீனக்குடாவிலிருந்து திருமலை வரையில் உள்ள புகையிரதப் பாதைக்கு அமைப்பதற்கென கனமான தண்டவாளங்களையும் அதற்கான சிலிப்பர்கட்டைகளையும் கொண்டுவந்து குவித்து ஒருசில தினங்களாக புகையிரத சேவை ஊழியர்கள் மிகவும் தீவிரமாக இந்த் தண்டவாளங்களை அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் பின்பு இன்றுவரை இந்தவேலைகளை யாவும் ஆமைவேகத்திலேய செல்லுகின்றன. பல மாதங்களாகியும் ஒரு சில யார் தூரத்துக்கு மட்டுமே இந்தத் திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வெளிஊர்களிலிருந்து சீனக்குடா வரையில் கடுகதி புகையிரதத்துக்கான இந்தக் கனமான தண்டவாளங்கள் பல வருட காலத்துக்கு முன்னதாகவே போடப்பட்டிருந்தும்கூட சீனக் குடாவிலிருந்து திருமலை வரையிலுள்ள 6 மைல்களுக்கு இந்த வேலையை விஸ்தரிக்க இத்தனை கால தாமதமாகுவதற்கான காரணம்புரியாது இங்குள்ள பொதுமக்கள் ஆச்சரியப்படுகின்றனர்.

### 'விபத்து ஏற்பட்டால்தான் தடுப்பு நடவடிக்கை?'

திருக்கோணமலையில் மட்டிக்கழி என்னும் இடத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையிலே தான் அண்மையில் யாழ்ப்பாண கடுகதி பஸ்வண்டியும் புகையிரத சாமான் வண்டியும் விபத்துக்குள்ளானது. இந்தக் கடவையில் ஒரு கதவு போடும்படி பல தடவைகள் பொதுமக்கள் நகரசபைக்கு வேண்டுகோள் விடுத்தும் கூட செவிசாய்க்கப்படவில்லை. மக்கள் இதுபற்றி கவலை தெரிவித்துள்ளனர்.

### '1,000 ரூபா பிணை'

அண்மையில் விபத்துக்குள்ளான யாழ்ப்பாணக் கடுகதி பஸ் வண்டிச் சாரதி

ரண பொதுமக்கள் அலசி ஆராய்ந்து புரிந்துகொள்வது சிரமம். ஆனால் சிந்திக்கவல்லவர்கள், விளைவுகளை பொதுமக்களுக்கு எடுத்து விளக்கப்படுத்தி வழி நடத்துவது அவர்கள் கடமை.

1000 ரூபாய் பிணையில் விடுபட்டுள்ளார். திருமலை மாவட்ட நீதிபதி திரு. ஷேர்லி குணவர்த்தன முன்னிலையில் ஆஜரான இவர் பிணையில் விடுவிக்கப்பட்டு இவர் மேல் வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

### தென்வியட்னாமில் பௌத்தர் எதிர்ப்பு

சைகோன், நவ. 13

தென்வியட்னாம் பௌத்தர்கள்; அரசாங்கத்துக்கெதிராகத் தமது போராட்டத்தை வலுப்படுத்துவதெனத் தீர்மானித்துள்ளனர்.

தென்வியட்னாமில், மக்களிடையே அதிகசெல்வாக்குள்ள பௌத்த ஸ்தாபனம் ஒன்றை விட்டுவிட்டு, மற்றுமொரு ஸ்தாபனத்துக்கு தென்வியட்னாம் அரசங்கம் அங்கிகரம் அளித்ததைத் தொடர்ந்து, கடந்தஓகஸ்ட் மாதந் தொடக்கம், தென்வியட்னாம் பௌத்தர்கள், அரசாங்கத்தைத் தீவிரமாக எதிர்த்து வந்துள்ளனர்.

### 'வாரியாரின் பிரசங்கத்தை அஞ்சல் செய்க'

சுழிபுரம், திங்கள்

கொழும்பு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் தொடர்ந்து நடைபெறவிருக்கும் திருமுருககிருபானந்த வாரியாரின் தொடர் கதாப்பிரசங்கத்தை அஞ்சல் செய்து ஒலிபரப்ப நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிபரை வழக்கம்பறை இந்துஇளைஞர் இயக்கத்தினர்'வேண்டியுள்ளனர். இதுவிடமாக ஒருநீண்டமகஜரை செயலாளர், திரு க. வாமதேவன் அதிகாரிக்கு அனுப்பியுள்ளார்

### வாரியார் பேச்சு கேட்க சென்றுள்ளனர்

உடுவில், திங்கள்

இலங்கைக்கு விஜயம்செய்திருக்கும் தென்னிந்திய சமயப்பெரியார் திரு முருக ஸ்ரீ கிருபானந்தவாரியாரின் கதாப்பிரசங்கத்தைக்கேட்பதற்காக இங்குள்ள பலர் கொழும்பு சென்றுள்ளனர்.

ஸ்ரீ வாரியார் கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் 'பெரியபுராணம்' பற்றி சில நாட்கள் தொடர்ச்சியான கதாப்பிரசங்கம் நிகழ்த்தவிருப்பது தெரிந்ததே.

### கொட்டும் மழையிலும் களைபிடுங்கினர்

அளவெட்டி, திங்கள்

அளவெட்டிப் பகுதி நெல் வயல்களில் கல்லூரி மாணவர்கள் களை பிடுங்கினார்கள்.

தெல்லிப்பளை யூனியன், மகாஜனக் கல்லூரிகளின் மாணவர்கள், சென்ற சனிக்கிழமை, கொட்டும் மழையிலும் உற்சாகமாக களை பிடுங்கினார்கள். பாடசாலை மாணவர்கள் விவசாயத்தில் நல்ல அனுபவம் பெறல் வேண்டுமென்ற அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, இப்பகுதியில் உள்ள ஏனைய பாடசாலைகளும் களை பிடுங்கும் பணியில் ஈடுபட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

### அருணோதயா வெற்றி

அளவெட்டி, திங்கள்

அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் 3-1 கோல்களால் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வெற்றியீட்டியது.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org